வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk
மலர் : 03
02.03.2022 புதன்கிழமை
இதழ் : 87
பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# போர் குற்ற ஆதாரங்களை திரட்டுவதற்கு தன்னார்வ நிதியை பயன்படுத்தக்கூடாது

## ஜெனிவாவில் இலங்கை அரசு கடும் எதிர்ப்பு

ஜெனிவா, மார்ச் 02

**போர் குற்ற ஆதாரம் திரட்டும் பொறிமுறைக்கு தன்னார்வ நிதியை பயன் படுத்த இலங்கை எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.**

**மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத்தொடரின் உயர்மட்ட பிரிவு கூட்டத்தில் நேற்று உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

மேலும், சாட்சியங் களை சேகரிக்கும் பொறி முறையானது நல்லிணக்க முயற்சிகளுக்கு தடை களை ஏற்படுத்தவும், கடந்த கால காயங்களை மீண்டும் திறப்பதன் மூலம் வெறுப்பை வளர்க்கவும், சமூகத்தை துருவப்படுத் தவும் மட்டுமே முடிந்தது என்றும் அவர் கூறினார்.

மேலும், சாட்சிகளை திரட்டுவதற்கான நிதி சேகரிப்பதானது இலங்கை மக்களுக்கு உதவாது. நாட்டின் ஒற்றுமை, பொரு ளாதார அபிவிருத்தி, சமாதானம் என்பவற்றை இது பாதிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், பயங்கரவாத தடைச் சட்டம் கருத்துச் சுதந்தி ரத்தை கட்டுப்

15

## இன்று ஏழரை மணிநேர மின்வெட்டு நடைமுறை!

கொழும்பு, மார்ச் 02

இன்று புதன்கிழமை நாடு முழுவதும் ஏழரை மணிநேர மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படவுள் ளது என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பகல்வேளை 5 மணி நேரமும், இரவு வேளை இரண்டரை மணி நேரமும் இந்த மின்வெட்டு நடை முறைப்படுத்தப்படவுள்ளது.

இதன்படி, காலை 8 மணி தொடக்கம் மதியம் ஒரு மணி வரையும் பின் னர் மாலை 6 மணி தொடக் கம் இரவு 8.30 மணி வரை ஈ, ரி, யூ, வி, டபிள்யூ வலயங்களில் மின்வெட்டு நடைமுறைப் படுத்தப்படும்.

15

## 5ஆம் திகதி முதல் தடையற்ற மின்சாரம் வழங்க வேண்டும்!

### ஜனாதிபதி கோட்டாபய உத்தரவு

கொழும்பு, மார்ச் 02

வரும் ஐந்தாம் திகதி முதல் தடையற்ற மின் சாரத்தை வழங்க வேண் டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகேவுக்கு உத்தரவு பிறப்பித்துள் ளார்.

அத்துடன், மின் நிலை யங்களுக்கு தேவையான எரிபொருளை தடை யின்றி பெற்றுக் கொள்வ தற்கான நடவடிக்கை களை துரிதமாக செயல் படுத்துமாறும், மின்னுற் பத்திக்கு தேவையான எரி பொருளை தனியார் தரப் பினரிடமிருந்தேனும் பெற்றுக்கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கியுள் ளார்.

ஜனாதிபதி

15

# இலங்கை குறித்து நாளை ஜெனிவாவில் விவாதம்!

## ஆதரவு திரட்டுவதில் அரசு தீவிரம்

கொழும்பு, மார்ச் 02

ஐக்கிய நாடுகள் மனித உரிமை கள் சபையின் 49 ஆவது கூட்டத் தொடர் நேற்று முன்தினம் உத்தி யோகபூர்வமாக ஆரம்பமானது. இந்த கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான விவாதம் நாளை நடைபெறவுள்ளது.

இலங்கைக்கு ஆதரவான நாடு களின் ஒத்துழைப்புடன் தமக்கான நீதியை பெற்றுக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை உள்ளதாக அர சாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை தொடர்பான விவா தத்துக்கு முன்னோடியாக அதனை வெற்றிகரமாக எதிர்கொள்வது தொடர்பில் முக்கிய பேச்சு நேற்று முன்தினம் ஜெனீவா நகரிலுள்ள இலங்கை தூதரகத்தில் நடை பெற்றுள்ளது.

பூகோள இலங்கை பேரவை, மற்றும் ஐரோப்பிய நாடுகளிலுள்ள இலங்கை யர்கள் அமைப்பின் பிரதி நிதிகளுடன் இலங்கையிலிருந்து சென்றிருந்த வெளிநாட்டமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தலைமை யிலானஅரசாங்க தூதுக் குழு இந்தப் பேச்சு நடத்தியிருந்தது.

இலங்கைக்கு எதிராக ஐ.நா மனித உரிமை ஆணையாளரினால் முன்வைக் கப்பட்டுள்ள யோசனைகள் தொடர்பி லும் அதற்கு வெற்றிகரமாக

15

## சுகாதார உத்தியோகத்தர்கள் இன்றுமுதல் வேலைநிறுத்தம்!

கொழும்பு, மார்ச் 02

சுகாதார உத்தியோகத் தர்கள் இன்று புதன் கிழமை முதல் இரு நாட் கள் தொழில்சங்க நடவ டிக்கையில் ஈடுபடவுள்ள னர்.

சம்பளப் பிரச்னை உள்ளிட்ட தங்கள் கோரிக்கைகளுக்குத் தீர்வு வழங்குவதற்கு, அரசாங் கம் இதுவரையில் நட வடிக்கை எடுக்காமையா லேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார தொழிற்சங்க சம் மேளனம் தெரி வித்துள்ளது.

15

## கொரோனாவால் 22 பேர் உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 02

நாட்டில் கொரோனா தொற்றால் நேற்று முன் தினம் மட்டும் 22 பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க

15



## இறுக்கமான சுகாதார நடைமுறைகளுடன் திருக்கேதீஸ்வரர் ஆலய சிவராத்திரி விழா

மன்னார், மார்ச் 02

பாடல் பெற்ற திருத்தலமாக விளங் கும் இலங்கையில் உள்ள பஞ்ச ஈஸ்வரங் களின் முதன்மையானதாக கருதப்படும் மன்னார் திருக்கேதீஸ்வர திருத்தலத்தின் மஹா சிவராத்திரி திருவிழா கொரோனா பெருந்தொற்று காரணமாக இறுக்கமான சுகாதார நடைமுறைகளுடன் நேற்றுக் காலை ஏழு மணி முதல் ஆரம்ப மாகி நடைபெற்றது.

15

## புலிகளால் ஏற்பட்ட தாக்கத்தைவிட தற்போது பாரதூரமான சவால்கள்!

### சுட்டிக்காட்டுகின்றார் கம்மன்பில



கொழும்பு, மார்ச் 02

தமிழீழ விடுதலைப் புலிகளினால் ஏற்பட்ட தாக்கங்களை காட்டிலும் தற்போது பாரதூரமான சவால்களை தாம் எதிர் கொண்டுள்ளதாக அமைச்சர் உதய கம்மன் பில தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் இலங்கை யில் முதலீடு செய்ய முத லீட்டாளர்கள் அச்சம் கொண்டுள்ளதாக கம்மன்பில மேலும் குறிப்பிட்டார்.

ஆகவே பொருளாதார நெருக்கடியை சீர் செய்ய சர்வதேச நாணய நிதியத்தை நாடு வது அவசியம்

15

# 24 மணிநேர மின்துண்டிப்புக்கான காலம் நீண்ட தூரத்தில் இல்லை!

### மின்சார சபை தொழில்சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 02

நாட்டில் தற்போது முன்னெடுத்துவரும் 5 மணி நேர மின் துண்டிப்பு 24 மணி நேரமாக மாறும் காலம் நீண்ட தூரத்தில் இல்லை.

ஆட்சியாளர்களின் பொறுப்பற்ற நடவடிக்கையே இதற்கு காரணமாகும் என இலங்கை மின்சார சபை ஐக்கிய தொழிற்சங்க கூட்டமைப்பின் அமைப்பாளர் ரன்ஜன் ஜயலால் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது முன்னெடுத்துவரும் மின் துண்டிப்பு தொடர்பாக நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது கைவசம் இருக்கும் எரிபொருள் தொடர்பாகவும் அதனால் மின்சாரசபை முன்னெடுத்துவரும் மின் துண்டிப்பு தொடர்பாகவும் அரசாங்கமும் நிறுவனங்களும் பொறுப்பற்ற முறையிலேயே கருத்து தெரிவித்து வருகின்றன.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிக்கும் விடயங்கள் மின்சாரசபைக்கு தெரியாது.

அதனால் பொறுப்பக்கூற வேண்டிய விடயத்துக்கு பொறுப்புக்கூறாமல் இருக்கும் ஆட்சியாளர்களும் நிறுவன பிரதானிகளுமே நாட்டில் இருக்கின்றனர்.

தற்போது ஒருநாளைக்கு 5மணி நேரம் மின் துண்டிப்பு மேற்கொண்டு அதற்கான மாற்றுவழியை தேடிக் கொண்டிருக்கும் ஆட்சியாளர்களுக்கு இன்னும் சில தினங்களில் 7மணி நேரம் மின் துண்டிப்பு மேற்கொண்டு அதற்கான பதிலை தேடவேண்டிவரும்.

இந்நிலையில் 7 மணி நேரம் மின் துண்டிப்பு மேற்கொள்ளும் ஆட்சியாளர்களுக்கு 24 மணி நேரம் நாட்டில் மின் துண்டிப்பு மேற்கொள்ளும் காலம் நீண்ட துரத்தில் இல்லை.

மின் துண்டிப்பை தொடர்ந்து முன்னெடுக்கின்றார்களே தவிர, இந்த பிரச்னையில் இருந்து மீள்வதற்கு எந்த நடவடிக்கையையும் மேற்கொள்வதில்லை அதனால் நாடு பெரும்அழிவுக்கே சென்றுகொண்டிருக்கின்றது. (ஐ)

### பயங்கரவாத தடை சட்டம்

# கூட்டமைப்பு எதிராக பிரேரணை கொண்டுவந்தால் ஆதரிப்பேன்!

### திஸ்ஸ விதாரண எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 02

பயங்கரவாத தடைச் சட்டம் தற்போதைய காலக்கட்டத்தில் அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுவதை அவதானிக்க முடிகிறது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக இரத்து செய்ய தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற மட்டத்தில் யோசனையினை கொண்டுவந்தால் அதற்கு ஆதரவு வழங்குவேன் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும்,பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண குறிப்பிட்டார்.

பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பில் வினவிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

யுத்தக்காலத்தில் பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நடைமுறைப் படுத்தப்பட்டதன் தாக்கம் இன்றுவரை



தொடர்கிறது.யுத்தம் நிறைவடைந்து 12 வருடங்கள் நிறைவடைந்த நிலைமையிலும் பயங்கரவாத தடைச்சட்டம் அமுலில் இருப்பது முறையற்றதாகும்.

பயங்கரவாத தடைச்சட்டம் தற்போதைய காலக்கட்டத்தில் அரசியல் நோக்கங்களுக்காக செயல்படுத்தப்படுவதை அவதானிக்க முடிகிறது.

பயங்கரவாத தடைச்சட்டம் ஊடாக கைது செய்யப்பட்டு நீண்டநாட்கள் தடுப்பு காவலில் வைக்கப்பட்டவர்கள் பலர் கடந்த காலங்களில் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

பயங்கரவாத தடைச்சட்டம் மனித உரிமை மீறல் குற்றங்களுக்கு சார்பாக அமையும் என்ற காரணத்தினார் சர்வதேச நாடுகள் தொடர்ந்து பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்து செய்யுமாறு வலியுறுத்துகின்றன.

உலகில் ஜனநாயகத்தை முன்னிலைப்படுத்தி செயற்படும் நாடுகளில் பயங்கரவாத தடைச்சட்டம் போன்ற சட்டங்கள் நடைமுறையில் இல்லை.

இளம் தலைமுறையினர் மத்தியில் தீவிரவாத கொள்கைகள் ஏதும் கிடையாது என்பதை நன்கு விளங்கிக் கொள்ள முடிகிறது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக இரத்து செய்ய தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற மட்டத்தில் கொண்டு வரும் அனைத்து யோசனைகளுக்கும் ஒத்துழைப்பு வழங்க தயார் - என்றார். (ஐ)

# 168 தொற்றாளர் குணமடைந்தனர்

கொழும்பு, மார்ச் 02

நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளான மேலும் 168 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதன்படி, கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 609,092 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் இதுவரை கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 646 034 ஆக அதிகரித்துள்ளது. (ஐ)

# ஐந்து நாட்களுக்கு பின்னர் மின்வெட்டை நிறுத்த முடிவு

### நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ

கொழும்பு, மார்ச் 02

எதிர்வரும் ஐந்து நாட்களுக்குப் பின்னர் மின்வெட்டை நிறுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதற்காக மின்சார சபைக்கு தேவையான எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தனியார் பஸ்களுக்கு இலங்கை போக்குவரத்து சபையின் சாலைகளில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் இருந்து எரிபொருளை வழங்குவதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், புகையிரத திணைக்கள களஞ்சியசாலைகளிலும் எரிபொருளை சேமிப்பதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ஐ)

## இப்படியும் நடக்கிறது...!

கனடாவிலிருந்து நண்பர் ஒருவர் பேசினார்.

பேசினார் என்றதும் தொலைபேசியில் கதைத்ததைத்தான் சொல்கிறேன் என்று நினைத்து விடாதீர்கள்.

வாழ்நாளில் அப்படியொரு ஏச்சைக் கேட்டதில்லை.

அவருக்கு அவ்வளவு கோபம்.

“தமிழ் மக்களை முட்டாள்கள் என்று இந்தத் தலைவர்கள் நினைப்பது இன்று நேற்றல்ல, அது ஆண்டாண்டு காலமாகத்தான் நடந்துகொண்டிருக்கின்றது. அதற்காக இவ்வளவு அடிமுட்டாள்கள் என்று அவர்கள் நினைக்கின்றார்கள், அவர்கள் அவ்வாறு நினைப்பவர்களில் நாங்களும் நீங்களும்தான் இருக்கிறீர்கள் என்பது உங்களுக்கு தெரியவில்லையா?“ - அவர் கத்திக்கொண்டே இருந்தார்.

எதற்காக இப்படி கத்துகிறார் என்பதைக்கூட இதுவரை சொல்லவில்லை.

“கொஞ்சம் பொறடாப்பா.... விசயத்தைச் சொல்லன்“, என்றேன்.

“இவர்கள் என்ன ஐ. நா. ஆணையாளருக்கு லவ் லெற்றரா அனுப்புகிறார்கள்?“ என்று அவர் திரும்பக் கேட்டபோதுதான் அவருக்கு ஏற்பட்டிருக்கின்ற கோபம் எதற்காக என்பது தெரிந்தது.

தொடங்கியிருக்கும் ஐ. நா. மனிதஉரிமைப் பேரவையின் கூட்டத்தொடரில் ஆணையாளர் இலங்கை தொடர்பான தனது அவதானிப்புக்களை இந்த கூட்டத்தொடரில் சமர்ப்பிப்பார். அதன் பின்னர் அதுதொடர்பான விவாதம் நடக்கும். அதுமாத்திரமே இந்தக் கூட்டத்தொடரில் நடக்கும்.

இதற்காக தனது அவதானிப்புக்களை தயாரித்து பெப்ரவரி ஆரம்பத்திலேயே ஆணையாளர் தனது அறிக்கையை இலங்கை அரசாங்கத்துக்கு அனுப்பி, அவர்களின் பதிலையும் கடந்த பெப்ரவரி பத்தொன்பதாம் திகதியே கேட்டுப்பெற்றும் விட்டார்.

இந்த இலட்சணத்தில் நமது தலைவர்கள் பேரவை கூட்டத் தொடர் ஆரம்பிப்பதற்கு முதல்நாள் கடிதங்களை அனுப்பிவிட்டு, அதன் பிரதிகளை ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கிறார்கள்.

இது தமிழ் மக்களை திருப்திப்படுத்துவதற்கு மாத்திரமே உதவும் என்பது பச்சைக் குழந்தைக்கும் தெரிந்த ஒன்று.

அவ்வாறெனில், இதனை தெரிந்துகொள்ளாமல் அனுப்புகின்ற அளவிற்கு நமது தலைவர்கள் “அறிவுஜீவிகளா“ அல்லது, தமிழ் மக்களை முட்டாள்கள் என்று நம்புவதன் பிரதிபலிப்பு இதுவா என்பதே அந்த நண்பரின் கோபத்துக்கு காரணம்.

நாங்கள் இன்னமும் நம்புகின்ற தலைவர்களும் இவர்களுக்குள் இருப்பதால், அவர்களையும் சேர்த்தல்லவா அவர் திட்டுகிறார், விட்டுக்கொடுக்க முடியாமல், “அதிலென்ன, அவர்களின் கடித்தில் உள்ள தகவல்களை இனி அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகள் விவாதத்தின்போது பயன்படுத்துவார்கள்தானே“ என்று இழுத்தேன்.

ஆணையாளருக்கு அனுப்பிய கடிதத்தின் பிரதியை அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகளுக்கும்தான் நமது தலைவர்கள் அனுப்பியிருக்கிறார்கள்.

அவர் விடுவதாக இல்லை,

“இப்படி சொல்லுவீர் எண்டும் எனக்குத் தெரியும். எங்கள் ஐந்து கட்சித் தலைவர்கள் அனுப்பிய கடித்ததை படித்துப் பார்த்ததனீரோ“ என்று திரும்பக்கேட்டார் நண்பர்.

பொய் சொல்ல மனம் இடம் தரவில்லை.

“போன வருசம் அனுப்பினது படிச்சனான்தானே. அதைத்தானே சில மாற்றங்களைச் செய்து அனுப்பியிருப்பினம்“ என்றேன் நகைச்சுவையாக.

அவர் சிரிப்பார் என்று பார்த்தால, அவருக்கு இன்னும் கோபம் வந்திருக்கவேண்டும்.

“உங்களையும் திருத்த ஏலாது. உங்கட தலைவர்களையும் திருத்த ஏலாது“ என்று கூறிவிட்டு அவர் தொடர்பை துண்டித்துக்கொண்டார்.

- ஊர்க்குருவி

ஈழநாடு
Eelanadu
02.03.2022 புதன்கிழமை
பிலவ வருடம், மாசி 18

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# சிங்களவர்களின் ஜெனிவா பயணம்?

ஐ. நா., மனித உரிமைகளின் பேரவையின் 49ஆவது கூட்டத் தொடர் ஆரம்பித்திருக்கின்றது. ஒவ்வொரு கூட்டத்தொடரின் போதும், தமிழ்த் தேசிய தரப்புக்கள் ஜெனிவா நோக்கி செல்வது வழக்கமான ஒன்று. கடந்த பன்னிரெண்டு வருடங்களாக தமிழ்த் தேசிய அரசியல் ஜெனிவாவை அடிப்படையாகக் கொண்டுதான் இயங்கி வருகின்றது. ஆனால், இம்முறை, பிரதான எதிர்கட்சியாக இருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஹரீன் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார ஆகியோர் நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறைத் தண்டனை அனுபவித்துவரும், ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நீதி கோரி, ஜெனிவா சென்றுள்ளனர் என்று செய்திகள் வெளியாகியிருக்கின்றன. இதேவேளை, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் நீதி வேண்டி சர்வதேச நீதிமன்றத்தை நாடவுள்ளதாக, சிங்களவரான கர்தினால் மல்கம் ரஞ்சித் கூறிவருகின்றார். இலங்கைக்குள் நீதி கிடைக்காதென்பதை சிங்கள அரசியல்வாதிகளும் ஏற்றுக் கொள்கின்றார்களா?

முன்னாள் ஜனாதிபதியும், இந்நாள் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவும் ஒரு காலத்தில் நீதி வேண்டி, ஜெனிவா சென்ற ஒருவர்தான். ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியில், மக்கள் விடுதலை முன்னணியினருக்கு எதிராக இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்காக நீதி வேண்டி, மகிந்த ராஜபக்ஷ, ஜெனிவாவிற்கு சென்றிருந்தார். ஆனால் அதே மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்த போது, ஜெனிவா அழுத்தங்களை வெளிநாடுகளின் தலையீடுகள் எனக் கூறி நிராகரித்தார்.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் அழுத்தங்கள் வெளிநாட்டு தலையீடு என்றால் - அந்த வெளிநாட்டு தலையீட்டை கோரிய முதலில் அரசியல்வாதி, மஹிந்தவாகத்தான் இருக்க முடியும். ஆனால், அதே மஹிந்தவின் ஆட்சியில், அவருக்கு எதிராக தமிழர்கள் ஜெனிவா செல்லும் நிலைமை ஏற்பட்டது. இப்போது, அவர் பிரதமராக இருக்கின்ற அரசாங்கத்துக்கு எதிராக, சிங்களவர்கள் ஜெனிவா செல்கின்றனர். இலங்கையின் அரசியல் வரலாற்றில் இது போன்ற பல விசித்திரங்களை காணலாம்.

இலங்கையின் மனித உரிமைகள் விவகாரம் சர்வதேச ரீதியில் ஒரு பேசுபொருளாக இருக்கின்றது என்பது உண்மைதான் - ஆனால், அதனால் இதுவரையில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய விமோசனங்கள் கிடைக்கவில்லை என்பதும் உண்மை. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களால் நாடுகளை கட்டுப்படுத்த முடியாது. இதனால்தான் இதுவரையான பிரேரணைகளால் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய எந்தவொரு நன்மையும் ஏற்படவில்லை. மனித உரிமைகள் பேரவையின் பலவீனம் தொடர்பில் - அதன் முன்னைநாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையே குறிப்பிட்டிருக்கின்றார்.

அதாவது, ஐ. நா. மனித உரிமைகள் பேரவையென்பது, குறுகிய தேசியவாத நலன்களாலும் புவிசார் அரசியலாலும் கட்டுப்படுப்படுகின்றது. இந்தக் கூற்று மனித உரிமைகள் பேரவையின் பலவீனத்தை தெளிவுபடுத்துகின்றது. பல்வேறு பலவீனங்கள் இருந்தாலும் கூட, தமிழர் பிரச்னையை தொடர்ந்தும் பேசுபொருளாக வைத்திருப்பதற்கு இதனையும் விட்டால் வேறு வழிகள் எதுவுமில்லை என்பதும் உண்மைதான்.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையிலிருந்து, இந்த விடயத்தை ஐ. நா. பொதுச் சபைக்கு கொண்டு செல்ல வேண்டுமென்று சிலர் வாதிட்டு வருகின்றனர். அவ்வாறு வாதிடுவதில் தவறில்லை ஆனால், ஒருவேளை ஐ. நா. பொதுச் சபைக்கு கொண்டு சென்றாலும்கூட - அப்போதும் பெரியளவில் முன்னேற்றம் ஏற்படுமென்பதற்கு எவ்வித உத்தரவாதம் இல்லை. ஏனெனில், ஐ. நா. கட்டமைப்பு அடிப்படையில் மிகவும் பலவீனமானது. இதனை விளங்கிக் கொள்ளாமல் அதிகம் எதிர்பார்ப்பது தவறானது. எனினும் வேறு வழிகள் இல்லாத போது, இருப்பதன் மீதுதான் நம்பிக்கை வைக்க வேண்டும். சமஷ்டி அடிப்படையிலான, அரசியல் தீர்வு வரும் வரைக்கும், இருக்கின்ற மாகாண சபையின்மீது நம்பிக்கை வைப்பது போன்று.

ஏனெனில், எதனையும் நிராகரிப்பது மிகவும் இலகுவானது. ஆனால், ஒன்றை நிராகரித்த பின்னர் அடுத்தது என்னவென்னும் கேள்விக்கு பதிலோ முயல்கொம்பு போன்றது. ஏனெனில், பதில் எவரிடம் இல்லை. நாம் தற்போதிருக்கின்ற சூழ்நிலையை கருத்தில் கொண்டுதான் ஒன்றை ஆதரிப்பது - எதிர்ப்பது பற்றி சிந்திக்க வேண்டும். எதிர்ப்பது எப்போதுமே சுலபமானது.

# வத்திக்கானை அடைந்தது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சமாச்சாரம்!

அலசுவது இராஜதந்திரி



இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான கர்தினால் மல்கம் ரஞ்சித் எதனைக்கூறி வந்தாரோ அதற்கு தற்பொது செயல் வடிவம் கொடுத்துள்ளார்.

உலக கத்தோலிக்க திருசச்பையின் தலைவர் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸை வத்திக்கானில் சந்தித்து 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பந்தமாக இலங்கை அரசு உண்மை நிலவரத்தை வெளிப்படுத்துவதிலும் பாராபட்சமற்ற நீதி விசாரணையை மேற்கொள்வதிலும் அசமந்தப் போக்குடனிருப்பதாக கர்தினால் மல்கம் ரஞ்சித் பரிசுத்த பாப்பரசரிடம் தெரிவித்துள்ளார்.

கர்தினால் மல்கம் ரஞ்சித் கேட்டுக் கொண்டதெல்லாம் உயிர்த்த ஞாயிறு அனர்த்தம் தொடர்பாக அமைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு மேற்கொண்ட விசாரணை அறிக்கையின் பிரகாரம் உரிய நடவடிக்ககைகளை அரசு எடுக்க வேண்டும் என்பதேயாகும்.

அரசின் அசமந்தப்போக்கை சாடியதோடு வத்திக்கான் புறப்படுவதற்கு முன்பதாக சட்டமா அதிபரையும் பொலிஸ் திணைக்களத்தையும்கூட அரசு சார்பாக செயல்படுவதாக கர்தினால் மல்கம் ரஞ்சித் சாடியிருந்தார்.

அத்துடன், வத்திக்கான் சென்று பரிசுத்த பாப்பரசரை நேரில் சந்தித்து 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு அனர்த்தம் தொடர்பாக முறையிடப் போவதாக எச்சரித்து வந்தமைக்கு அமைவாகவே நேற்றுமுன்தினம் பரிசுத்த பாப்பரசரை நேரில் சந்தித்து இலங்கை அரசின் அசமந்தப்போக்கை பரிசுத்த பாப்பரசர் தெரிவித்துள்ளார்.

இத்தாலியில் அமைந்துள்ள வத்திக்கான் உலக கத்தோலிக்கர்களின் காவலனாக இருக்கும் பரிசுத்த பாப்பரசரின் இருப்பிடம் மட்டுமல்ல. வத்திக்கான் தனி ஒரு தேசம் என்பதுவும் குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் உலக கத்தோலிக்க திருச்சபை தலைவரிடம் மாத்திரமல்ல. ஒரு தேசத்தின் தலைவரிடமும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து கர்தினால் மல்கம் ரஞ்சித் முறைப்பாடு செய்துள்ளார் என்றே குறிப்பிட முடியும்.

நேற்று முன்தினம் வத்திக்கானுக்கருகே இருக்கின்ற சுவிற்சர்லாந்தின் ஜெனிவா நகரிலேயே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகியிருந்தது. இக்கூட்டத்தொடரில் பங்குபற்றவென இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் மற்றும் நீதி அமைச்சர் அலிசப்ரி ஆகியோர் ஜெனிவாவில் தங்கியுள்ளனர்.

எனவே ஒருபுறம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக வத்திக்கானில் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்களும் மறுபுறத்தே ஐ. நா. மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் பங்குபற்ற இலங்கையின் வெளிவிவகார அமைச்சரும், நீதி அமைச்சரும் ஜெனிவாவில் தங்கியுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விடயத்தை பொறுத்தவரை அதுகுறித்து சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்ப்பதில் கர்தினால் மல்கம் ரஞ்சித் நடந்து கொண்ட விதம் வரவேற்புக்குரியதே. ஏனெனில் கர்தினால் மல்கம் ரஞ்சித் எதனைக்கூறினாரோ அதனை செயல்படுத்தியுள்ளார். இதன்மூலம் ஏற்கனவே சர்வதேச சமூகம் அறிந்து வைத்துள்ள வடக்கு - கிழக்கின் அரசியல் மற்றும் மனிதாபிமான பிரச்னைகள் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக மட்டுமல்ல. தென்னிலங்கையில் சட்டம், ஒழுங்கு என்பவற்றுக்கு சவால் விடுகின்ற விடயங்கள் சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு இலங்கையின் முன்னணி ஆன்மீகத் தலைவரொருவர் மூலமாக கொண்டுவரப்பட்டுள்ளமையையும் அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை, இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடந்தவேளை ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன தமக்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பந்தமாக எதுவுமே முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருக்கவில்லை என்றும் இதனை ஒரு சிலுவையை ஏந்தி சத்தியம் செய்து கூறவும் தாம் தயாராக இருப்பதாக கூறியுள்ளார். அவரது இக்கூற்று வேடிக்கையானதாகவே இருக்கின்றது. ஏனெனில் ஒரு நாசகார வேலையை செய்பவர்கள் அதுபற்றி முன்கூட்டியே அறிவிப்பார்கள் என்று எண்ணுவது மடமையிலும் மடமையாகும். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து இந்திய புலனாய்வாளர்கள் மேலோட்டமாக இலங்கை புலனாய்வாளர்களுக்கு அறிவித்திருந்தார்கள். ஆனால், இது குறித்து எதனையும் கவனத்தில் எடுக்காதிருந்தது இலங்கை புலனாய்வாளர்களின் தவறாகும். அத்துடன் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளமையை நோக்கம்போது அவருக்கும் புலனாய்வுத் துறையினருக்குமிடையே உரிய வகையில் தொடர்புகள் இல்லாதிருந்ததையே அறிய முடிகின்றது.

இந்த நிலையில் பரிசுத்த பாப்பரசரை கர்தினால் மல்கம் ரஞ்சித் சந்தித்துள்ளமை தமது அடுத்த நகர்வாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தையும் அவர் நாடமுடியும் என்ற கலக்கத்தை இலங்கை ஆட்சியாளர்களுக்கு ஏற்படுத்தலாம் என்றே கருத முடியும்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மாசி - 02 புதன்கிழமை
பிலவ வருடம் - மாசி 18
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 1.30
திதி : அமாவாசை




**மேடம்**
நீங்கள் வாழ்வில் முன்னேறுவீர்கள். பேச்சில் கவனம் தேவை. நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடித்துவிடுவீர்கள். முயற்சியில் ஏற்பட்டிருந்த தடை நீங்கும். நேர்மை கூடும்.

**இடபம்**
நண்பர்கள் மூலம் நீங்கள் விரும்பிய சுபச்செய்திகள் வரும். செலவினங்கள் அதிகரிக்கும். யாருக்கும் சிபாரிசு செய்யாதீர்கள். உங்கள் குடும்ப எதிரியைத் திறம்பட எதிர்கொண்டு வெல்வீர்கள்.

**மிதுனம்**
தாமதமாகிக் கொண்டிருந்த பணம் கைக்கு வரும். முந்தைய நாளில் இருந்து வந்த மன உளைச்சல் தீரும். பேச்சினால் பிரச்னை வராமல் இருக்க கவனமாக இருங்கள்.

**கடகம்**
கோபத்தை அடக்கி அனுசரிக்க நன்மை உண்டாகும். கால தாமதமாகக்கூடும். பொறுமைக்குப் பரிசு கிடைக்கும். உங்களது வாழ்வில் நல்ல திருப்பம் உண்டு.

**சிம்மம்**
செலவுகள் குறையும். கருணை மிக்க சிந்தனைகள் கூடும். தனிப்பட்ட முறையில் தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். வியாபாரிகளுக்கு சந்தோஷமும் வெற்றியும் கிடைக்கும்.

**கன்னி**
குழந்தைகள் மூலம் மகிழ்ச்சிகரமான விஷயம் நடக்கும். பணியாளர்களுக்கு மேலதிகாரியை பற்றி இருந்த வருத்தம் நீங்கும். மற்றவர்களிடம் கனிவாகப்பழகி நல்ல பெயர் எடுப்பீர்கள்.

**துலாம்**
வருமானம் பெருகும். நண்பர்கள் மூலம் நன்மை கிடைக்கும். நீண்டகாலத் தடைகள் விலகி நல்ல வாய்ப்பை பெறுவீர்கள். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நேற்றைய வருத்தங்கள் தீரும்.

**விருட்சிகம்**
உயர்ந்தோர் ஆலோசனையுடன் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். பேச்சிலும், செயலிலும் கவனமாக இருப்பது நல்லது. உங்களுக்குக் கீழ் வேலை பார்ப்பவர்களின் ஆதரவு கிடைக்கும்.

**தனுசு**
கடன் வாங்கும் முன் பலமுறை யோசித்துவிட்டு வாங்குங்கள். வீட்டிலும், பணியிடத்திலும் விட்டு கொடுத்து செல்வது நல்லது. பணியாளர்களுக்கு உயர் அதிகாரியுடன் எதிர்பாராத சந்திப்பு உண்டு.

**மகரம்**
பணியிட ரகசியங்கள் கசியாமல் இருக்க கவனமாக இருங்கள். உங்கள் திறமை வெளிப்படும். செல்வாக்கு, புகழ் அதிகரிக்கும். சகிப்புத்தன்மை கூடும். பணியில் அலட்சியம் வேண்டாம்.

**கும்பம்**
முன்கோபத்தை தவிர்க்க வேண்டும். பயம் நீங்கும். உறவினர், நண்பர்களுடன் கருத்து வேறுபாடு உண்டாகலாம். வேலையில் நிதானம் தேவை. குடும்பத்தில் சந்தோஷம் நிலவும்.

**மீனம்**
தொழில், வியாபார விஷயத்திற்கான முயற்சிகள் தொடரும். கூடுதல் முயற்சியின் மூலம் உங்களுக்கு வெற்றி கிடைக்கும். அதிகம் உழைப்பீர்கள். நற்பலன் கிடைப்பதால் சிரமம் மறையும்.

# மாநிலங்களை புரிந்து கொள்ளாத தன்மையில் மோடி இருக்கிறார்

## சென்னையில் ராகுல் காந்தி குற்றச்சாட்டு



சென்னை, மார்ச் 02

“எல்லா மாநிலங்களை பற்றியும் புரிந்து கொள்ளாத தன்மையில் தான் பிரதமர் மோடி இருக்கிறார். ஜம்மு காஷ்மீர் மக்கள் தங்களை தாங்களே ஆள முடியாத சூழல் உள்ளது. இந்தியா எப்படி இருக்க வேண்டும் என தீர்மானிக்க நீங்கள் யார்? மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும்“ என காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ராகுல் காந்தி தெரிவித்தார்.

தமிழக முதல்வர ஸ்டாலினின் ‘உங்களில் ஒருவன்’ சுயசரிதை நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்ற காங்கிரஸ் எம்.பி,, ராகுல் காந்தி கூறும்போது, “ஒரு அருமையான புத்தகத்தை வழங்கிய என் அண்ணன் ஸ்டாலினுக்கு வாழ்த்துக்கள் என்றார். தமிழகத்திற்கு வருவது எனக்கு எப்போதும் மகிழ்ச்சியான விஷயம் தான்.

நாடாளுமன்றத்தில் என்னை அறியாமல் பத்திரிகையாளர்களிடம் ‘நான் தமிழன்’ என்று கூறினேன். என் ரத்தம் தமிழ் மண்ணில் கலந்திருக்கிறது. முதல்வர் ஸ்டாலினின் வாழ்க்கை நீண்ட நெடிய போராட்டம் நிறைந்தது என்பதால், சுயசரிதை நூலை எழுதி உள்ளார்.

எல்லா மாநிலங்களை பற்றியும் புரிந்து கொள்ளாத தன்மையில் தான் பிரதமர் மோடி இருக்கிறார். ஜம்மு காஷ்மீர் மக்கள் தங்களை தாங்களே ஆள முடியாத சூழல் உள்ளது. இந்தியா எப்படி இருக்க வேண்டும் என தீர்மானிக்க நீங்கள் யார்? மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும்““ எனவும் ராகுல் காந்தி தெரிவித்தார்.

# “திராவிட மொடல்” கோட்பாட்டை இந்தியா முழுவதும் விதைப்பேன்

## சுயசரிதை வெளியீட்டு விழாவில் ஸ்டாலின் உறுதி

சென்னை, மார்ச் 02

திராவிட மொடல் கோட்பாட்டை இந்தியா முழுவதும் விதைப்பதை தனது பணியாக மேற்கொள்ளவிருப்பதாக தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தெரிவித்திருக்கிறார். தனது சுயசரிதை வெளியீட்டு விழாவில் பேசிய முதலமைச்சர், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவை என்றும் வலியுறுத்தினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின் சுயசரிதை நூலான “உங்களில் ஒருவன் பாகம் 1” சென்னையில் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ராகுல் காந்தியால் சென்னையில் வெளியிடப்பட்டது. இதன் போது, முதலமைச்சர் வழங்கிய ஏற்புரையில், ‘திரா விட மாடல் கோட்பாட்டை’ இந்தியா முழுமைக்கும் விதைப்பதை தனது பணியாக மேற்கொள்ள விருப்பதாக தெரிவித்தார்.

கடந்த சில நாட்களுக்கு முன்புதான் திராவிட மாடல் என்ற வார்த்தையை ஸ்டாலின் பயன்படுத்தியிருந்தார். தமிழ்நாட்டில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் தி.மு.க. அனைத்து மாநகராட்சிகளையும் கைப்பற்றியது.

அந்த தேர்தல் வெற்றியை குறிக்கும் வகையிலே பேசிய ஸ்டாலின், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் ஆளும் திமுக கூட்டணிக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றி எங்களது ஒன்பது மாத கால ‘திராவிட மொடல்’ ஆட்சிக்குத் தமிழ்நாட்டு மக்கள் அளித்துள்ள நற்சான்றிதழ் என குறிப்பிட்டார்.

# எத்தனை வழக்குகள் போட்டாலும் அ.தி.மு.க.வை அழிக்க முடியாது

## எடப்பாடி பழனிசாமி ஆவேச பேச்சு

சென்னை, மார்ச் 02

நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் தில்லுமுல்லு செய்து தி.மு.க. வெற்றி பெற்று விட்டது என்றும், அ.தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் மீது எத்தனை வழக்குகள் போட்டாலும் அ.தி.மு.க.வை அழிக்க முடியாது என்றும் எடப்பாடி பழனிசாமி ஆவேசமாக பேசினார்.

சென்னையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

“தமிழகத்தில் ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாக அ.தி.மு.க. செயல்பட்டு வருகிறது. ஆனால் எதிர்க்கட்சிகளே இருக்க கூடாது என தி.மு.க. அரசு நினைக்கிறது.

அதற்காகத் தான் திட்டமிட்டு பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது.

தேர்தலில் வாக்கு எந்திரத்தில் தில்லுமுல்லு, சதி திட்டம் தீட்டி தி.மு.க. வெற்றி பெற்றுள்ளது.

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் மீது பொய் வழக்கு பதிவு செய்து கைது செய்தால் கட்சியை அழித்துவிடலாம் என்று நினைக்கிறீர்கள். எத்தனை வழக்குகள் போட்டாலும் இந்த இயக்கத்தை யாராலும் அழித்துவிட முடியாது” என எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

# தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியை போல முதலமைச்சரின் பேச்சிலும் முரண்பாடு

## பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை

சென்னை, மார்ச் 02

தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியை போல, முதல மைச்சர் மு.க.ஸ்டாலினின் பேச்சும் முரண்பாடாக உள்ளதாக பா.ஜ.க. மாநிலத்தலைவர் அண்ணாமலை விமர்சனம் செய்துள்ளார்.

சென்னை கிண்டியில் நடைபெற்ற மத்திய பட்ஜெட் மீதான விளக்கக்கூட்டத்தில் பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை கலந்து கொண்டார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசிய அவர், முதலமைச்சரின் வாழ்க்கை வரலாற்று புத்தக வெளியீட்டிற்கு வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்வதாக கூறினார்.

மேலும், அவசரகாலச் சட்டகாலத்தை தமிழகத்தின் இருண்டகாலம் எனக்குறிப்பிடும் முதலமைச்சர், தனது புத்தக வெளியீட்டு விழாவிற்கு அவசரகாலச் சட்டத்தை ஏற்படுத்திய அப்போதைய பிரதமர் இந்திராகாந்தியின் பேரனான, ராகுல் காந்திக்கு அழைப்பு விடுத்திருப்பது நகைச்சுவையை ஏற்படுத்துவதாக விமர்சனம் செய்தார்.

# இன்று திருநீற்று புதன்



இன்று றோமன் கத்தோலிக்க திருச்சபை “திருநீற்றுப் புதன்” விழாவைக் கொண்டாடுகின்றது. இன்று குருவானவர் ஆசீர்வதிக்கப்பட்ட சாம்பலை எடுத்து “மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள்” (மாற்கு 1:15) அல்லது “மனிதனே நீ மண்ணாய் இருக்கின்றாய் மண்ணுக்கே திரும்புவாய் என நினைத்துக்கொள்” (தொ.நூல் 3:19 ) என்று கூறி இறைமக்களின் நெற்றியில் சாம்பலால் சிலுவை அடையாளம் வரைவார். இது ஆண்டவர் யேசுவின் மாபெரும் உயிர்ப்பு விழாவிற்கு ஆயத்தமாக நாற்பது நாட்கள் அனுஸ்டிக்கப்படும் தவக்காலத்தின் முதல் நாளாகும் . இவ்வாறு பெரும் சிறப்போடும் எதிர்நோக்கோடும் தொடங்கப்படுகின்ற இந்த தவக்காலம் இறைமகன் இயேசுவின் உன்னத தியாகத்தையும் திருச்சபையின் உயரிய பணியையும் கோடிட்டுக் காட்டுகின்றது. எனவே சாம்பல் எப்பொழுதும் மனிதன் சாவுக்குட்பட்டவன் என்பதன் அடையாளமாகவும் மனமாற்றத்திற்கு அடையாளமாகவும் இருக்கின்றது.

வேதாகமத்திலே பழைய ஏற்பாட்டு பின்னணியில் மக்கள் தமது மனமாற்றத்தின் அடையாளமாக சாக்குடை அணிந்து சாம்பலில் உட்கார்வதை அறிகின்றோம் . தானியேல் நோன்பிருந்து சாக்குடை உடுத்தி சாம்பல் மீது உட்கார்ந்து தம் மக்களின் மனமாற்றத்திற்காக வேண்டினார் .(தானியேல் 9:3) நினிவே நகரம் அழிக்கப்படும் என்று யோனா அறிவித்ததை அறிந்த நினிவே அரசன் அரச உடையை களைந்து விட்டு சாக்குடை உடுத்தி சாம்பல் மீது உட்கார்ந்து மனமாற்றத்திற்காக ஜெபித்ததுடன் மக்களையும் நோன்பிருந்து சாக்குடை அணிந்து கடவுளை நோக்கி மன்றாடுமாறு கட்டளையிட்டான் ( யோனா 3:4-9) புதிய ஏற்பாட்டில் மத்தேயு (4:7-11) மாற்கு (1:12-13). லூக்கா (4:1-13) ஆகிய ஒத்த நற்செய்தியாளர்கள் இயேசு நாற்பது நட்கள் இரவும் பகலும் பாலை நிலத்தில் நோன்பிருந்தார் என்று குறிப்பிடுகின்றனர்.

எனவே நம்முடைய வாழ்வை முழுமையாக ஒரு சுய ஆய்வு செய்ய இன்றைய நாள் நம்மை அழைத்து நிற்கின்றது . நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் அது நோன்பாக இருந்தாலும் தர்மமாக இருந்தாலும் செபமாக இருந்தாலும் அதை பொருளுணர்ந்து மனதார செய்கின்றோமா? அல்லது பிறர் பாராட்டை பெறவும் கடமைக்காகவும் செய்கின்றோமா? இன்று முதல் இவற்றை இறையேசுவின் அன்பிற்காய் - நமது ஈடேற்றத்திற்காய் செய்ய முயற்சிப்போம்

**க.அருள்நேசன்.**
**குருநகர்**

# சுற்றுலாப் பயணிகளுக்கு பி.சி.ஆர். அவசியமில்லை

கொழும்பு, மார்ச் 02

முழுமையாக கொரோனா தடுப்பூசிகளை பெற்று வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் நேற்று முதல் பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொள்ளத் தேவையில்லை என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன வெளியிட்ட புதிய சுற்று நிருபத்தில், “முழுமையாக தடுப்பூசிகளை பெற்று 2 வாரங்கள் நிறைவடைந்த சுற்றுலாப் பயணிகள் பி.சி.ஆர். அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை.

8 வயது அல்லது அதற்கு குறைந்த சிறார்கள், ஒரு தடுப்பூசியேனும் ஏற்றியிருப்பின் அது முழுமையான தடுப்பூசி ஏற்றிக் கொண்டதாக கருதப்படும்.

எவ்வாறாயினும், 12 அல்லது அதற்கு மேற்பட்ட வயதானவர்கள் முழுமையாக தடுப் பூசி பெற்றிருக்கா விடின், நாட்டுக்கு வருகை தருவதற்கு 72 மணித்தியாலத்திற்குள் பெற்றுக் கொண்ட பி.சி.ஆர். அறிக்கையை சமர்ப்பிப்பது கட்டாயமானது.

அதே போன்று ஏதேனுமொரு தடுப்பூசியை ஒரு தடவை மாத்திரம் பெற்றுக் கொண்டால் போதும் என்று பரிந்து ரைக்கப்பட்டிருக்குமாயின், அவ்வாறான தடுப்பூசியைப் பெற்று நாட்டுக்கு வருபவர்களும் முழு மையாக தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டவர்களாகவே கருதப்படுவர்.

கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து 7 நாட்களின் பின்னர் முதற்கட்ட தடுப்பூசியை மாத்திரம் பெற்றுக் கொண்டவர்கள் வருகை தருவார்களாயின், கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டமைக்கான பி.சி.ஆர். அல்லது அன்டிஜன் அறிக்கையையும், முதற்கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டதற்கான அட்டையையும் தம்வசம் வைத்திருக்க வேண்டும்.

கடந்த ஆறு மாதங்களுக்குள் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டு, ஒரு தடுப்பூசியை மாத்திரம் பெற்றுள்ளவர்கள் தடுப்பூசியைப் பெற்று இரு வாரங்களின் பின்னர் மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கையை தம்வசம் வைத்திருக்க வேண்டும்.

நாட்டுக்கு வரும் அனைத்து சுற்றுலாப்பயணிகளும் தம்வசம் வைத்திருக்கும் கொரோனா பரிசோதனை அறிக்கைகள் மற்றும் தடுப்பூசி அட்டைகள் ஆங்கில மொழியில்காணப்பட வேண்டும்.

மார்ச் மாதம் முதலாம் திகதி நள்ளிரவு முதல் இந்த புதிய வழிகாட்டல்கள் நடைமுறைப் படுத்தப்படும். உலக மற்றும் தேசிய மட்டத்திலான கொவிட் நிலை மைகளை ஆராய்ந்து அதன் பின்னர் புதிய வழிகாட்டல்களின் மாற்றங்கள் செய்யப்படும்” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கடற்படைக்கு காணி சுவீகரிப்பு 12 உரிமையாளர்கள் இணக்கமாம்!

## முல்லைத்தீவு அரச அதிபர் சொல்கிறார்

**முல்லைத்தீவு, மார்ச் 02**

**முல்லைத்தீவு - வட்டுவாகல் கடற்படை தளத்துக்கு காணி சுவீகரிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் க. விமலநாதன் தெரிவித்துள்ளார்.**

இந்நிலையில், சிலர் காணிகளை அரசுக்கு வழங்குவதற்கு முன்வந்துள்ளனர். பலர் காணிகளை வழங்க விரும்பமின்மையையும் எதிர்ப்பையும் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

வட்டுவாகல் கடற்படைத் தளத்திற்காக 671 ஏக்கர் காணி கையகப்படுத்த கோரப்பட்டுள்ளது இதில் 292 ஏக்கர் அரச காணிகளாக காணப்பட்டுள்ள போதும் ஏனைய 379 ஏக்கர் தனியார் நிலமாக உள்ளது. இதில், 35 பேருக்கு சொந்தமான 379 ஏக்கர் காணியில் சிலர் காணி சுவீகரிப்பிற்கு மாற்றுக்காணி அல்லது இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ள முன்வந்துள்ளார்கள். பலர் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

2014 ஆம் ஆண்டு வட்டுவாகல் கடற்படை தளத்தின் கணிசுவீகரிப்பு வர்த்தமானி அறிவித்தலின் படி தொடங்கப்பட்ட சுவீகரிப்பு நடவடிக்கை பிரிவு 5 சட்டத்தின் கீழ் நில அளவீடு முன்னெடுக்கப்பட்ட போதும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார்கள்.

காணி உரிமையாளர்கள் 23 பேர் இவ்வாறு காணியை வழங்க விருப்பம் இல்லாத நிலை யில் கடந்த காலங்களில் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்கள். இருந்தும் காணியை சுவீகரிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றார். (ஐ)

# கிளிநொச்சி போக்குவரத்து சேவைக்கு 4 ஆயிரம் லீற்றர் எரிபொருள் தேவை!

கிளிநொச்சி, மார்ச் 02

கிளிநொச்சி மாவட்டத்தில் தனியார் சேவை முழுமையாக இடம்பெற 4000 லீற்றர் எரிபொருள் தேவையுள்ள நிலையில் பொருத்தமான நேரத்தில் கொள்வனவு செய்ய ஏற்பாடு செய்து தாருங்கள் என்று கிளிநொச்சி மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கிருஷ்ணரூபன் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

கிளிநொச்சி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்விடயத்தை தெரிவித்தார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பிரச்னை காரணமாக எமது பேருந்து சேவைகளை உரிய முறையில் நடத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். முக்கியமாக மக்களை ஏற்றியவாறு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் நின்று எரிபொருளை பெற்றுக்கொள்வதனால் அந்தந்த நேரங்களிற்கு மக்களுக்கான சேவையை செய்ய முடியாதுள்ளது.

இந்த நிலை தொடர்ந்தும் அடுத்த வாரமும் இருக்குமாயின் எமது சேவையை மட்டுப்படுத்தி செய்யவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்படுவோம். இதேவேளை எதிர்வரும் 7ஈம் திகதி பாடசாலைகைள் ஆரம்பிக்கப்பட இருப்பதால், அக்காலப்பகுதியில் எங்களால் வழமைபோன்று முன்னெடுக்கப்படுகின்ற பாடசாலை சேவைகளையும் முன்னெடுக்க முடியாத நிலைக்கு தள்ளப்படுவோம்.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரிடம் நேரில் சென்று கடிதம் ஒன்றை வழங்கியுள்ளோம். கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அடித்தட்டு மக்கள் அதிகமாக வாழ்கின்ற மாவட்டம். தனிப்பட்ட வாகனங்களை பாவிப்பதைவிட இவ்வாறான பொது போக்குவரத்தையே அதிகளவான மக்கள் பயன்படுத்துகின்றனர்.

பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், வைத்தியசாலை மற்றும் அன்றாட வேலைகளுக்கு செல்பவர்கள் என அனைத்து தரப்பினரும் இந்த பேருந்து சேவையையே பயன்படுத்தி வருகின்றனர். பொது போக்குவரத்தை பொதுவாக செய்வதற்கு முன்னுரிமை அடிப்படையில் இந்தப் பேருந்துகளுக்கு அன்றாடம் தேவையான எரிபொருளை குறிப்பிட்ட ஒரு நேரத்தில் வழங்குவதற்கு எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் முன்வர வேண்டும் என இந்த ஊடக சந்திப்பின் ஊடாக வேண்டுகை விடுக்கின்றேன்.

குறிப்பாக, கிளிநொச்சி மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 80 பேருந்துகள் சேவையில் ஈடுபடுகின்றது. குறித்த சேவைகளுக்காக நாளொன்றுக்கு சுமார் 4000 லீற்றர் எரிபொருள் எமது சங்கத்துக்கு தேவைப்படுகின்றது. இவ்வாறு தேவைப்படும் எரிபொருளை ஒரு வாரத்துக்கு தேவையான எரிபொருளை சேமித்து பொது போக்குவரத்திற்கு வழங்கு வதற்கு அரசாங்க அதிபர் ஏற்பாடுகளை செய்து தர வேண்டும். அவ்வாறு ஏற்பாடுகள் செய்யப்படின் மாத்திரமே அடுத்தடுத்த நாட்களில் சேவைகளை மேற்கொள்ள முடியும்.

இலங்கை போக்குவரத்து சபைகூட மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளையே செய்கின்றன. ஆனால், நாங்கள் சேமிப்பில் உள்ள எரிபொருளையும், வரிசையில் நின்று பெற்றுக்கொள்ளும் எரிபொருளையும் பயன்படுத்தி சேவைகளை செய்து வருகின்றோம். இவ்வாறான நிலையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பகலாயினும் சரி இரவாகினும் சரி பொருத்தமான ஒரு நேரத்தை ஒதுக்கீடு செய்து பேருந்துகளுக்கு அல்லது கொண்டு வரமுடியாத நிலையில் உள்ள பேருந்துகளுக்கான எரிபொருளை கொள்கலன்களில் வழங்குவதற்கு ஏற்பாடுகளை செய்து தர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம்.

கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 10 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் உள்ளன. அவற்றின் ஊடாக எமது தனியார் பேருந்து சேவைகள் இடம்பெறுகின்றன. எம்மால் கோரப்பட்ட இந்த 4000 லீற்றர் எரிபொருளை இந்த பத்து எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக பங்கிட்டு பெற்றுக் கொள்ள அரசாங்க அதிபர் ஆவன செய்து உதவ வேண்டும் என கோருகின்றோம்.

அவ்வாறு பெறப்படும் எரிபொருளை எமது சங்கத்தின் சிபாரிசு மூலம் அளவுத்திட்டத்திற்கு அமைவாக எரிபொருளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த பொது போக்குவரத்து சேவை முழுமையாக இடம்பெறுவதற்கு எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம் - என்றார். (ஐ)

# ரஷ்யா, உக்ரைன் பிரஜைகளுக்கு இலங்கையின் சலுகை

கொழும்பு, மார்ச் 02

இலங்கையில் தற்போது தங்கியுள்ள ரஷ்யா மற்றும் உக்ரைன் நாட்டு பிரஜைகளுக்கான விஸா காலத்தை இரு மாதங்களுக்கு நீடிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

11 ஆயிரத்து 463 ரஷ்யர்களும், 3 ஆயிரத்து 993 உக்ரைனியர்களும் இலங்கையில் தற்போது சுற்றுலாப் பயணிகளாக தங்கியுள்ளனர். இவர்களுக்கான விசா காலமே நீடிக்கப்பட்டுள்ளது. (அ)

## இ.போ.ச சாலைகளிலிருந்து தனியார் பஸ்களுக்கு டீசல்

கொழும்பு, மார்ச் 02

பொது போக்குவரத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்கு தேவையான எரிபொருளை இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான சாலைகளில் இருந்து வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

டீசல் தட்டுப்பாடு காரணமாக தனியார் பேருந்துகளுக்கு ஏற்பட்டுள்ள இடையூறுகளை கருத்திற் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இதன்படி, தனியார் பஸ்களுக்கான எரிபொருளை இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான சாலைகளில் இருந்து விநியோகிக்குமாறு அனைத்து சாலை முகாமையாளர்களுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, தனியார் பஸ்களுக்கு எரிபொருள் விநியோகம் செய்யும் முறைமையொன்று தயாரிக்கப்படாவிட்டால், இன்று முதல் பேருந்துகளை சேவையில் இருந்து விலக்கிக் கொள்ள நேரிடும் என தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மாகாணங்களுக்கிடையிலான பஸ்கள் உட்பட தனியார் பஸ்கள் இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சங்கங்கள் தெரிவித்துள்ளன. (அ)

## 2400 ரூபாய்க்கு மஞ்சள் விற்பனை செய்ய முடிவு

கொழும்பு, மார்ச் 02

ஒரு கிலோ மஞ்சளை 2,400 ரூபாய்க்கு எந்தவொரு சதொச மற்றும் இலங்கை மசாலா நிறுவனத்திலும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு இரா ஜாங்க அமைச்சர்ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களுக்கு சுத்தமான மஞ்சள் கிடைக்க இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தொற்றுநோய் காலங்களில், உள்ளூர் சந்தையில் ஒரு கிலோ மஞ்சள் ரூ. 8 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்பட்டது.

மஞ்சளின் தேவை நாட்டில் அதிகரித்தமையால் இறக்குமதியை தடை செய்ய ஜனாதிபதி தீர்மானித்ததுடன், மக்கள் தமது சொந்த மஞ்சள் அறுவடை மூலம் தமது தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு ஊக்குவித்தார்.

இந்த முடிவு அமுலுக்கு வருவதற்கு முன், இந்தியாவில் இருந்து மஞ்சள் இறக்குமதி செய்யப்பட்டது.

விவசாய சமூகத்தை ஊக்குவித்ததன் மூலம், நாடு குறிப்பிடத்தக்க மஞ்சள் அறுவடையை மேற்கொண்டது. தரமான மஞ்சளில் நாடு தற்போது தன்னிறைவு பெற்றுள்ளது.

இதுவரை விவசாயிகளிடமிருந்து 5 இலட்சம் கிலோ மஞ்சளை அரசாங்கம் கொள்முதல் செய்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும், மக்கள் 7500 மெற்றிக் தொன் மஞ்சள் தூளை நுகர்வோர் பயன்படுத்துகின்றனர் என்றார். உள்ளூர் பயிர்ச்செய்கை மூலம் 11ஆயிரம் மெற்றிக் தொன் மஞ்சளை அறுவடை செய்து, மீதமுள்ளவற்றை ஏற்றுமதி செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என தெரிவித்துள்ளார். (ஐ)

## 38,500 தொன் உரங்கள் இறக்குமதிக்கு அனுமதி!

கொழும்பு, மார்ச் 02

38 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் உரத்தை இறக்குமதி செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த வருடம் சிறுபோகத்தில் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக மியூரேட் ஒஃப் பொட்டேஷ் எனப்படும் பொட்டாசியம் குளோரைட் உரத்தை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.அதற்கமைய 38,500 மெற்றிக் தொன் உரங்களை இறக் குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (ஐ)

# வேகமாக பரவும் ஒமைக்ரோன் மருத்துவ நெருக்கடி அதிகரிப்பு

**கொழும்பு, மார்ச் 02**

**ஒமைக்ரோன் தொற்று மிகவும் வேகமாக பரவி வருகின்றமையால் கோவிட் தொற்றாளர்களுடன், ஏனைய நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வைத்தியசாலைகளில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது.**

இந்நிலைமை மேலும் தீவிரமடையாமல் இருப்பதற்கு அனைவரும் மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று சுவாச நோய் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் கீதால் பெரேரா தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஏனைய வைரஸ்களுடன் ஒப்பிடும் போது ஒமைக்ரோன் மிகவும் வேகமாகப் பரவுகின்றமையால் தொற்றுக்குள்ளாகி வைத்தியசாலைகளில் சேர்க்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

இதனால், வைத்தியசாலைகளில் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. காரணம் கோவிட் நோயாளர்கள் சேர்க்கப்படும் விடுதிகளில் ஏனைய நோயாளர்களை அனுமதிக்க முடியாது.

ஏற்கனவே இதய நோய் மற்றும் சுவாச நோய்களால் பாதிக்கப்பட்டு ஒட்சிசன் தேவையுடைய நோயாளர்கள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவ்வாறான நோயாளர்கள் இருக்கும் பகுதிகளில் கொவிட் நோயாளர்களை அனுமதித்தால் அது அபாயம் மிக்கதாகும்.

எனவே, சகலரும் மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதன் மூலம் இவ்வாறான பாதிப்புக்களை தவிர்த்துக் கொள்ள ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தற்போது நாட்டிலுள்ள பெரும்பாலான தொற்றாளர்கள் தமக்கு தொற்று ஏற்பட்டுள்ளது என்பதை அறியாமலேயே வீடுகளில் உள்ளனர். இது ஏனைய நோயாளர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். இது தவிர தற்போது கொவிட் தொற்றுக்கு பின்னரான நோய் நிலைமைகளும் ஏற்படுகின்றன.

சிலருக்கு தொற்றின்போது எவ்வித அறிகுறிகளும் காண்பிக்காத போதிலும், சுமார் 4 வாரங்களின் பின்னர் ஏனைய நோய் நிலைமைகள் ஏற்படுகின்றன. இவ்வாறு அறிகுறிகள் தென்படுபவர்கள் பொறுத்தமான வைத்தியரை நாடி உரிய ஆலோசனைகளைப் பெற வேண்டும் - என்றார். (ஐ)

## இந்திய பிரஜைகள் இருவர் கைதாகினர்

கொழும்பு, மார்ச் 02

இந்திய பிரஜைகள் இருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் இருவரும் 15 மில்லியன் ரூபாய் பெறுமதியான தங்கத்தை சட்டவிரோதமாக டுபாய்க்கு கடத்த முற்பட்டபோதே கைது செய்யப்பட்டனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட போது அவர்களிடம் இருந்து 490 கிராம் எடையுள்ள மூன்று தங்க கட்டிகள் கைப்பற்றப்பட்டன. (ஐ)

## கோவிட் 19 கட்டுப்பாடுகள் புதிய வழிகாட்டல் வெளியீடு!

கொழும்பு, மார்ச் 02

நாட்டில் நேற்று முதலாம் திகதி முதல் எதிர்வரும் 31ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய சுகாதார வழிகாட்டல்கள் அடங்கிய புதிய சுற்று நிருபம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்தனவால் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைய ஏற்கனவே நடைமுறையிலிருந்த சில சுகாதார கட்டுப்பாடுகள் மேலும் தளர்த்தப்பட்டுள்ளன.

எவ்வாறிருப்பினும் வீடுகளிலிருந்து அநாவசியமாக வெளியிடங்களுக்குச் செல்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு புதிய வழிகாட்டலில் வலியுறுத்தப்பட்டுள்ளது. தொழில் நிறுவனங்களில் கூட்டங்கள் உள்ளிட்ட ஏனைய கூட்டங்களை சுகாதார விதிமுறைப்படி முன்னெடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், அவற்றில் பங்குபற்றக்கூடிய நபர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்படவில்லை.

மேலும், ஏனைய வீடுகள் அல்லது மண்டபங்களில் ஏற்பாடு செய்யப்படும் வைபவங்களில் அவற்றின் கொள்ளவில் 75 சதவீதமானோர் கொவிட் பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றி பங்குபற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வர்த்தக நிலையங்கள் அனைத்தையும் கொவிட் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் முன்னெடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நாளாந்த , வாராந்த சந்தைகள் உள்ளிட்ட வர்த்தக நிலையங்களை பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு உள்ளிட்டவற்றின் கண்காணிப்பின் கீழ் முன்னெடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. உல்லாச விடுதிகள், பல்பொருள் அங்காடிகள், பிரம்மாண்ட கடை தொகுதிகள் , மருந்தகங்கள், வங்கி மற்றும் காப்புறுதி நிறுவனங்கள் உள்ளிட்ட வர்த்தக தளங்கள் என்பவற்றை சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளுடன் முன்னெடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் சிகை அலங்கார நிலையங்களுக்கு வாடிக்கையாளர்கள் முன்னனுமதி பெற்று வருகை தர வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடசாலைகளை கல்வி அமைச்சின் தீர்மானத்திற்கமைய முன்னெடுத்துச் செல்ல முடியும். சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், பாலர் பாடசாலைகள் என்பவற்றை கோவிட் பாதுகாப்பு வழி முறைகளுடன் முன்னெடுத்துச் செல்ல முடியும்.

பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் பயிற்சி நிலையங்களை நிர்வாக மட்ட தீர்மானத்தின் அடிப்படையில் முன்னெடுத்துச் செல்ல முடியும். நீதிமன்ற நடவடிக்கைகளை சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளுக்கமைய முன்னெடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திரையரங்குகள் , உடற்பயிற்சி நிலையங்கள், விளையாட்டரங்குகள் கொவிட் கட்டுப்பாட்டு வழிமுறைகளின் கீழ் நடத்தப்பட வேண்டும்.

திருமண நிகழ்வுகளுக்கு 75 சதவீதமானோர் பங்குபற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மரண சடங்குகளில் கொவிட் வழிகாட்டல்களுக்கமைய பங்குபற்ற முடியும். வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை மீறி செயற்படுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று புதிய சுற்று நிருபத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## ஒரே நாடு ஒரே சட்டம் செயலணியின் பதவிக்காலம் 3 மாதங்களால் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 02

“ஒரு நாடு, ஒரே சட்டம்” தொடர்பான ஜனாதிபதி செயலணியின் பதவிக்காலம் 28ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

“ஒரு நாடு, ஒரே சட்டம்” என்ற ஜனாதிபதி செயலணி 2021 ஒக்ரோபர் 26 ஆம் திகதி ஜனாதிபதியால் நிறுவப்பட்டது.

13 பேர் கொண்ட இந்த செயலணியின் தலைவராக வணக்கத்துக்குரிய கலகொடை அத்தே ஞானசார தேரர் செயல்படுகின்றார்.

இலங்கைக்குள் ஒரே நாடு, ஒரே சட்டம் மற்றும் சட்ட வரைவைத் தயாரித்து, நீதி அமைச்சால் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் திருத்தங்களை ஆய்வு செய்து பொருத்தமான திருத்தங்கள் உள்ளதா எனத் தீர்மானித்து பொருத்தமானதாகக் கருதப்படும் முன்மொழிவுகளை சமர்ப் பிப்பதே இதன் நோக்கம் ஆகும்.

இதன்படி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பொது மக்கள் மற்றும் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய நிபுணர்கள் குழுவின் கருத்துக்களைப் பெறுவதற்கு செயலணிக்கு கூடுதல் கால அவகாசம் வழங்கும் வகையில் காலத்தை நீட்டித்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டார்.

செயலணி உறுப்பினர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை தகுந்த செயல் திட்டத்துடன் அடுத்த மூன்று மாதங்களுக்குள் செய்து முடிப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# மலையகப் பகுதிகளில் எரிபொருள் தட்டுப்பாடு

## சாரதிகள் பரிதவிப்பு

கொழும்பு, மார்ச் 01

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை வாகன சாரதிகளுக்கும், மக்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

அந்தவகையில், ஹற்றன் மற்றும் நுவரெலியா, கொட்டகலை ஆகிய எரிபொருள் நிலையங்களை சூழ வாகனங்கள் அணிவகுத்து நிற்பதுடன், அதிகளவு தூரம் வரை எரிபொருள் நிரப்புவதற்கு மக்கள் வரிசை நீடிப்பதையும் அவதானிக்க முடிந்தது.

அத்தோடு எரிபொருளை கொள்வனவு செய்யும்போது ஒவ்வொருவருக்கும் மிகக் குறைந்த அளவிலேயே எரிபொருளை பெற்றுக்கொள்ளுமாறு, எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் கட்டுப்பாடுகளை விதித்து வழங்கி வருவதாகவும், எரிபொருளுக்காக காத்திருக்கும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் குறித்த எரிபொருள் நிரப்பும் நிலையங்களை அண்மித்த பகுதிகளில் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டுள்ளது. (அ)

# முதிரை மரக்குற்றிகளுடன் இருவர் இலுப்பைக்கடவை பகுதியில் கைது!

மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதி, இலுப்பைக்கடவை பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 2.20 மணி அளவில் மிகவும் சூட்சுமமான முறையில் வாகனம் ஒன்றில் பதுக்கிக் கொண்டு செல்லப்பட்ட பல இலட்சம் ரூபாய் பெறுமதியான முதிரை மரக்குற்றிகளுடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.

விசேட அதிரடிப்படையினர் மற்றும் மடு வனவள பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் இணைந்து முன்னெடுத்த நடவடிக்கைகளின் போது மரக்கடத்தல் முறியடிக்கப்பட்டது.

வாகனம் ஒன்றில் நெல் மூட்டைகளுக்கு கீழ் பதுக்கி வைத்துக் கொண்டு செல்லப்பட்ட பல இலட்சம் ரூபாய் பெறுமதியான சுமார் 22 முதிரை மரக்குற்றிகள் இவ்வாறு மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட முதிரை மரக்குற்றிகள், வாகனம் மற்றும் கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களையும், விசேட அதிரடிப்படையினர் மற்றும் மடு வனவள பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் இணைந்து மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மன்னாரில் பெரும்போக அறுவடை டீசல் இன்மையால் பெரும் பாதிப்பு

## எரிபொருள் பெற வரிசையில் காத்திருக்கும் விவசாயிகள்

மன்னார், மார்ச் 02

**மன்னார் மாவட்டத்தில் தற்போது பெரும்போக அறுவடைகள் பல பிரதேசங்களிலும் இடம் பெற்று வரும் நேரத்தில் உழவு இயந்திரங்கள் மற்றும் அறுவடை இயந்திரங்கள் போன்றவற்றிற்கான எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.**

இதனால் மன்னார் மாவட்டத்தில் நெல் அறுவடையை மேற்கொண்டு வரும் விவசாயிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இதேவேளை, அதிகூடிய விவசாயப் பிரதேசமாக காணப்படும் நானாட்டான் மற்றும் முருங்கன் பகுதிகளிலும் தற்போது அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அறுவடைக்கு தேவையான உழவு இயந்திரங்கள் மற்றும் அறுவடை இயந்திரங்கள் போன்றவற்றுக்கான டீசல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

நானாட்டானில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையத்தில் டீசலை பெற்றுக் கொள்வதற்காக நானாட்டான், முசலி பிரதேச விவசாயிகள் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணியிலிருந்து வரிசையில் காத்து நின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் சில இடங்களில் அறுவடைகள் நிறைவு செய்யப்பட்டு இருந்தாலும் நானாட்டான் போன்ற பல பகுதிகளில் தற்போது அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அறுவடையின் போது உழவு இயந்திரம் அறுவடை இயந்திரம் போன்றவற்றுக்கு தேவையான டீசலை பெற்றுக் கொள்வதற்காக அதிகாலையில்



இருந்து வரிசையில் நிற்கிறோம்.

ஏற்கனவே உரம் மற்றும் கிருமி நாசினிகள் தட்டுப்பாட்டினால் எங்களிடம் கிடைத்த வளங்களை வைத்து இந்த விவசாயத்தை மேற்கொண்டு தற்போது அறுவடைக்கு தயாரான நிலையில் இவ்வாறு டீசல் பிரச்னையில் சிக்கி தவித்துக் கொண்டிருக்கின்றோம்.

இதனால் எமக்கு மீண்டும் மீண்டும் இழப்புகள் ஏற்படும். எனவே உரிய அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்து தடையில்லாமல் டீசல் எரிபொருள் விவசாயிகளுக்கு கிடைப்பதற்கு ஆவணம் செய்ய வேண்டும்.இல்லை என்றால் மிகவும் கஷ்டத்தில் உள்ள விவசாயிகள் தவறான முடிவுகளை எடுக்கக்கூடும்.

இங்கு வரிசையில் வைக்கப்பட்டுள்ள கேன்களை பார்க்கும்போது தற்போது 5 பவுசரில் டீசல் வந்தாலும் காணாது.

இந்த செயற்பாடுகளால் ஒரு சில நாட்களில் அறுவடை செய்ய உள்ள விளைநிலங்கள் பாதிக்கும்.

எனவே மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் இதற்கான முடிவை உடனடியாக எடுத்து விவசாய அறுவடை நடவடிக்கைகளுக்கு தடையில்லாத டீசல் எரி பொருட்களை வழங்க வேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொள்கிறோம் என பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ

# 3 நாள்கள் பிள்ளைகளுக்கு உணவு இல்லை கடும் மன விரக்தியில் தந்தை தற்கொலை!

## களுத்துறையில் சோகச் சம்பவம்

கொழும்பு, மார்ச் 02

“மூன்று நாட்களாக உணவு சமைப்பதற்கு வீட்டில் எதுவுமே இருக்கவில்லை. பிள்ளைகளுக்கு உணவுக்கு ஏதாவது தேடி வருவதாக கூறி, கணவர் வீட்டிலிருந்து சென்றார். எனினும், அவர் திரும்பி வரவில்லை. இதனையடுத்து வீட்டிலிருந்து இரு கதிரைகளை விற்பனை செய்துவிட்டு, பிள்ளைகளுக்கு உணவு சமைத்துக்கொடுத்தேன்.” -இவ்வாறு வாக்குமூலம் அளித்துள்ளார், பிள்ளைகளுக்கு உணவு கொடுக்க முடியாத கவலையில் தற்கொலை செய்துகொண்டார் எனக் கூறப்படும் நாகராஜா ரஞ்ஜனின் மனைவியான மாடசாமி மஞ்சுளா.

வெலிபென்ன சட்ட வைத்திய அதிகாரி நிஹால் ஜயநெத்தி முன்னிலையிலேயே இவர் இவ்வாறு வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

களுத்துறை, வெலிபன்ன பகுதியியைச் சேர்ந்த 37 வயதான நாகராஜா ரஞ்ஜன் என்பவரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

“எங்களுக்கு திருமணம் முடிந்து 14 ஆண்டுகள் ஆகின்றன. 12 வயதுக்கு குறைவான 4 பிள்ளைகள் உள்ளனர். மூன்று மகன்களும், ஒரு மகளும் எனக்கு உள்ளனர். நாங்கள் தெமுவத்த மற்றும் நெபட ஆகிய பகுதிகளிலிருந்து 9 மாதங்களுக்கு முன்னர் தொழில் தேடி, வெலிபென்ன பகுதிக்கு வருகைத் தந்தோம்.

கணவருக்கு நிரந்தர தொழில் இருக்கவில்லை . கூலித் தொழில் செய்து, அதில் கிடைக்கும் பணத்திலேயே வாழ்க்கையை கொண்டு நடத்தினோம். 3500 ரூபாவுக்கு வாடகைக்கு பெற்றுக்கொண்ட ஒரு அறை யொன்றிலேயே வாழ்ந்து வந் தோம்.

நிரந்தர பதிவு இல்லாமையினால், பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பகூட முடியவில்லை.” - எனவும் மஞ்சுளா கண்ணீர் மலக குறிப்பிட்டுள்ளார்.

“எனது கணவர் வெலிபன்ன பகுதியிலுள்ள காணியொன்றை துப்பரவு செய்யும் குத்தகையை பெற்றுக்கொண்டபோது, அதற்கான பணம் உரிய வகையில் கிடைக்கவில்லை. அதன் பின்னர் கணவருக்கு எந்தவொரு தொழிலும் கிடைக்கவில்லை. கடந்த மூன்று நாட்களாக பிள்ளைகளுக்கு உணவு கொடுக்க முடியாமையினால், கணவர் மன வேதனையில் இருந்தார். பிள்ளைகளுக்கு ஏதாவது கொண்டு வருகின்றேன் என கூறி சென்றார். ஆனால், உற வினர் ஒருவரின் வீட்டுக்கு அரு கில் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார். பிள்ளைகளுக்கு உணவு வழங்க முடியாமையினால், கண வர் தற்கொலை செய்துகொண்டார். தற்போது நானும், எனது பிள்ளைகளும் தனியாகி விட்டோம். பிள்ளைகள் சிறுவர்கள் என்பதனால், எனக்கு வேலைக்கு செல்ல முடியாது. எனது பிள்ளைகள் மேலும் நிர்க்கதியாகி விட்டார் கள்” எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் வெலிபென்ன பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)



# பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க கோரி உடுப்பிட்டியிலும் கையெழுத்து வேட்டை

யாழ்ப்பாணம், மார்ச் 02

பயங்கரவாத தடை சட்டத்தை நீக்கக் கோரி தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியினரால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை உடுப்பிட்டியிலும் இடம் பெற்றது.

முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சந்திரலிங்கம், சகிர்தன் தலமையில் இடம்பெற்ற போராட்டத்தில் தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியும் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் கலந்து கொண்டார்.

இதில் உடுப்பிட்டி தொகுதி இளைஞர் அணி தலைவர், உடுப்பிட்டி தொகுதி தமிழரசுக் கட்சி தலைவர், நிர்வாகிகள் இலங்கை தமிழரசுக் கட்சியின் நிர்வாகிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த கையெழுத்துப் போராட்டத்தில் மக்கள் ஆரஸவத்துடன் கையொப்பமிடுவதை அவதானிக்க முடிந்தது. (அ-02)



**பல்கலைக்கழகங்களில் இன-மத சிறுபான்மையினர் எவ்வாறு நடத்தப்படுகின்றனர் என மாணவர்களையோ, ஆசிரியர்களையோ, நிர்வாகத்தையோ கேட்டால் அவர்கள் உடனடியாகப் பல்கலைக்கழகங்களில் பல்லாண்டு காலமாகக் காணப்படும் வெவ்வேறு கலாசாரக் குழுக்களைச் சுட்டிக்காட்டக் கூடும்.**

**நிகொலா பெரேரா**

# மேலாதிக்கங்களும் இனப்பல்வகைமையும்

இன-மத ரீதியில் சிறுபான்மையைச் சார்ந்த மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பல்கலைக்கழகங்களில் கொடுக்கப்படும் இடம் யாது? தமது அடையாளங் களையும் தனித்துவத்தையும் வெளிக்காட்டுவதற்கான பாதுகாப்பான சூழலோ, சுதந்திரமோ அவர்களுக்கு உள்ளதா? பல்கலைக்கழகத்தின் அமைப்பு அல்லது கொள்கைகளோ, பல்கலைக்கழகச் சமூகத்தின் கலாசாரம் அல்லது மனப்பாங்கோ இவர்களுக்கு எதிரான ஒதுக்குமுறைகளை அகற்றி சமத்துவமான சந்தர்ப்பங்கள், உரிமைகள், மற்றும் சலுகைகளை வழங்கி அவர்கள் கற்கவும், பணிசெய்யவும் அவர்களை ஏற்றுக்கொள்ளும் ஒரு சூழலை வழங்குகின்றனவா? எமது கல்விமுறையின் பொதுவான நிலையைப் பிரதிபலிக்கும், தெற்கின் பல்கலைக் கழகமொன்றின் பெரும்பான்மைவாத நடைமுறைகள் பற்றி இவ்வுரையில் கலந்துரையாடுகின்றேன்.

பல்கலைக்கழகங்களில் இன-மத சிறுபான்மையினர் எவ்வாறு நடத்தப்படுகின்றனர் என மாணவர்களையோ, ஆசிரியர்களையோ, நிர்வாகத்தையோ கேட்டால் அவர்கள் உடனடியாகப் பல்கலைக்கழகங்களில் பல்லாண்டு காலமாகக் காணப்படும் வெவ்வேறு கலாசாரக் குழுக்களைச் சுட்டிக்காட்டக் கூடும். பெரும்பாலான பல்கலைக்கழகங்களும் பீடங்களும் தமிழ் மன்றம், இந்து மன்றம், முஸ்லிம் மஜ்லிஸ், மற்றும் பல்வேறு கிறிஸ்தவ சங்கங்களைக் கொண்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் நத்தார் கரோல், இஃப்தார் போன்ற கொண்டாட்டங்களை ஒழுங்குசெய்கின்றன. ஆகவே வெளிப்படையாகப் பார்க்கையில் சிறுபான்மையினர் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்களுக்கான பிரதிநிதித்துவம் வழங்கப்படுவது போல் எமக்குத் தென்படுகின்றது.

எனினும் உண்மையில் இவை வெறும் பெயரளவிலான நடவடிக்கைகளே. உதாரணமாக ஒரு பீடத்தின் சகல மாணவர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மாணவர் ஒன்றியங்களைக் கருதுவோம். இவர்கள் உண்மையில் எச்சாரினரைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் என்பது கேள்விக்குரியது. கலைப் பீடத்தின் மாணவர் ஒன்றியமானது வருட ஆரம்பத்தில் பௌத்த விழாக்கள், தானங்கள், பிரித் போன்றவற்றை ஒழுங்கு செய்வதுடன் வெசாக், பொசொன் போன்ற விசேட தினங்களில் பிக்குமாரையும் வரவேற்கும் பொறுப்பைக் கொண்டுள்ளது. மாணவர் ஒன்றியத்தின் பிரதான நிகழ்வான சிங்களக் கலை விழா அல்லது சாகித்திய உலெலவின் போது சிங்கள இலக்கியத்தின் முக்கிய புள்ளிகள், அவர்களின் பிரபல மேற்கோள்கள் போன்றவை ஒவ்வொரு தூணையும் அலங்கரித்துக் காணப்படும். இவ்விழாவின் முக்கிய பகுதியான நாடக விழாவின் போது பிரபலமான சிங்கள நாடகங்கள் மேடையேற்றப்படுவதுண்டு.



இவ்வாறான பெரும்பான்மையினர் சார்ந்த இயல்பு நிலையும், சிறுபான்மையினரின் சகிப்புத்தன்மையும் பல்கலைக் கழகங்களின் பொதுப்படையான வழக்கங்களாகக் காணப்படுகின்றன. ஆகவே உண்மையில் இன-மத பாகுபாடின்றிச் சகல மாணவர்களையும் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டிய மாணவர் ஒன்றியம், சிங்கள- பௌத்த மாணவர்களுக்கும் அவர்களது கலாசாரத்துக்கும் பாரபட்சம் காண்பிக்கின்றது. இதினின்றும் விலகிக் காணப்படும் ஏனைய சிறுபான்மைக் கலாசாரங்களைக் கையாள வேறு சங்கங்கள் தேவைப்படுகின்றன. ஆகவே பெரும்பான்மைக் கலாசாரமானது பொதுவான இயல்பு நிலையாகவும், சிறுபான்மைப் பிரதிநிதித்துவம் சகிக்கப்பட்ட பெயரளவுப் பதவிகளாகவுமே காணப்படுகின்றன. இங்கு எனது இனமானது பெரும்பான்மையைச் சாரும் பட்சத்தில் எனது நடவடிக்கைகள் குறிக்கப்படுவதோ, விமர்சிக்கப்படுவதோ, எதிர்க் கேள்வி கேட்கப்படுவதோ இல்லை.

மறுபுறம் சிறுபான்மை மாணவர்களும் ஆசிரியர்களும் வகுப்பறைக்குள்ளும் புறத்தேயும் எதிர்கொள்ளும் பாகுபாடுகள், அடக்குமுறைகள், வன்முறைகள் யாவை? வெளிப்படையாக, பதிலடி பற்றிய அச்சமின்றிப் பேசுவதற்கான சந்தர்ப்பம் அவர்களுக்கு வழங்கப்படின் எவ்வாறான விடயங்களை அவர்கள் முன்வைப்பார்கள்? கல்விசார் ஊழியர்கள் என்ற வகையில் உள்ளடக்குதல், ஏற்றுக்கொள்ளல், பாகுபாடுகளையும் பாரபட்சங்களையும் தட்டிக்கேட்டல் போன்றவை தொடர்பான உரையாடல்களை ஊக்குவிப்பதில் எமது பங்களிப்பு யாது? வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ ஊழியர்களும் நிர்வாகமும் மேற்கொள்ளும் அடக்குமுறைகளும் விரோதங்களும் என்ன? எமது பல்கலைக் கழகங்களில் நாம் உருவாக்கும் கலாசாரம் எத்தகையது?

அவர்கள் விரும்பும் கடும் நிற அபாயாக்கள், ஹிஜாப்கள் அல்லாது இளம் நிறங்களிலான அபாயாக்களை அணியுமாறு முஸ்லிம் மாணவிகள் கேட்கப்படுகின்றனர். பல்வேறு நிறங்களிலான ஷல்வார்களை உடுத்தித், தலையை மட்டும் மறைத்து ஹிஜாப் அணியும் முஸ்லிம் ஆசிரியை முன்னுதாரணமாகக் காட்டப்பட்டு அம்மாணவிகளிடம் உரையாடக் கோரப்படுகின்றார். இவ்வாறான கோரிக்கைகளை ஒசரிய அணிந்த ஒரு ஆசிரியை விடுத்ததன் பொருத்தம் யாது? பல்கலைக்கழகங்களின் இயல்பான கலாசாரமாக சிங்கள- பௌத்தம் காணப்படுவதால் தனிநபரொருவர் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பதில் ஆச்சரியம் இல்லையல்லவா?

உயிர்த்த ஞாயிறு தின குண்டுவெடிப்புச் சம்பவங்களின் பின் பல்கலைக்கழக வாயிற் காவலர்களால் முஸ்லிம் மாணவிகள் இடை நிறுத்தப்பட்ட சம்பவத்தை எடுத்துக் கொள்வோம். காதுகள் தெரியும் படி ஹிஜாப் அணியுமாறு அக் காவலாளிகள் மாணவிகளிடம் கூறுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகளை துன்புறுத்தல்கள் என இனம் காணும் நிலையில் பல்கலைக்கழகங்கள் உள்ளனவா? காவலாளிகளின் இந் நடத்தை உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டதா? இல்லாவிடில் சிங்கள முறையிலான நடை, உடை, பாவனையை இயல்பாகவும் ஏனைய சிறுபான்மை இனங்களை வழக்கத்திற்கு மாறானவையாகவும் கருதும் கலாசாரத்தினால் இவர்கள் இவ் வாறு செயற்படத் தூண்டப்பட்டனரா? பல்கலைக் கழகங்கள் இன-மத பாகுபாடுகளைப் பார்ப்பதில்லை என்பதற்கு முஸ்லிம் மஜ்லிஸ் போன்ற சங்ககளின் நிலவுகை போதுமான சாட்சியாக அமையுமா? இவ்வாறு அவர்களது உடைகளைப் பற்றியோ இனம் அல்லது மதத்தைப் பற்றியோ கருத்துகள் தெரிவித்த அக்காவலாளிகளிடம் இவர்கள் எரிச்சலையோ, அதிருப்தியையோ பின்விளைவுகளின்றிக் காண்பித்திருக்க முடியுமா? இச் சிறு நடவடிக்கைகள் மூலம் வெளிக்காட்டப் படும் “உங்கள் நடத்தைகளை நாங்கள் கண்காணிப்பதோடு உங்களை நாம் சகித்துக் கொண்டிருக்கின்றோம்” என்ற மனப்பாங்கைத் தான் அவர்கள் எதிர்க் கேள்வி கேட்க முடியுமா?

பல்கலைக்கழகங்கள் வெறும் பெயரளவிலான கலாசார ஒன்றியங்களை இன-மத பாகுபாடின்மைக்கான ஆதாரங்களாகச் சுட்டிக்காட்ட முடியாது. இனப்பல் வகைமையைப் பேண வேண்டிய மிகச் சிறிய கடமையையே அவர்கள் செய்யத் தவறுகின்றனர். சிங்களக் கலை விழாக் களில் தமிழ் மொழி நாடகங்களும் மேடை யேற்றப் பட வேண்டும். தமிழ் மற்றும் முஸ்லிம் இலக்கிய எழுத்தாளர்களின் சித்திரங்களும் உள்ளடக்கப்பட வேண்டும். இவை கட்டாயமாக மேற்கொள்ளப்பட வேண்டியவையாயினும் இந் நடவடிக்கைகள் மட்டும் போதா. இன-மத பாகுபாடு, அதனடிப் படையிலான துன்புறுத்தல்களுக்கு எதிராகச் சொல்லிலும் செயலிலும் ஈடுபடுதல் இன்றியமையாதது. பல்கலைக்கழகக் கலாசாரத்தை தாபித்து, அதனை முன்னெடுக்கும் நாம், குறிப்பாக இவற்றுக்கெதிரான கொள்கைகள், விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுப்பதோடு எமது சுய முயற்சிகள் மூலம் இப் பிரிவினைக்கு முற்றுப் புள்ளியிட முன்வர வேண்டும்.

**▸▸ எழுத்தாளர் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஆங்கில மொழிக் கற்பித்தல் துறையைச் சார்ந்தவர்.**

**▸▸ மொழிபெயர்ப்பு: கோபிகா சிவகுமார்**



“ உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி, தனது சொந்த மண்ணை விட்டு வெளியேற மறுத்து விட்டார். ‘நீங்கள் உள்ளே வந்தால் எங்கள் முதுகை எதிர் கொள்ளமாட்டீர்கள், எங்கள் முகத்தைத் தான் நேருக்குநேர் எதிர் கொள்வீர்கள்’ என்று ரஷ்ய படைகளுக்கு அவர் சவால் விட்டுள்ளார்.

குரு அரவிந்தன்

# ரஷ்யா மீதான பொருளாதார தடையும் உக்ரைனின் எதிர்காலமும்

உலகிலே அதிக நிலப்பரப்பைக் கொண்ட நாடான ரஷ்யா நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புடின் உக்ரைனுக்குள் நுழையுமுன் தன்னைப் பாதுகாக்க எல்லா ஏற்பாடுகளையும் முற்கூட்டியே செய்திருந்தார். அவருக்குச் சில நாடுகளின் முழு ஆதரவும் மறைமுகமாக இருந்ததால்தான் இதற்குள் தயங்காமல் இறங்கினார். இதைவிட அணுவாயுதங்களைக் கைவசம் வைத்திருப்பதால், உலகநாடுகள் இந்தப் பிரச்னைக்கு ஆயுத ரீதியாக நெருங்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையும் புடினுக்கு இருந்தது.

ரஷ்யாவோடு உள்ள பழைய உறவு காரணமாக இந்தியா மௌனம் காக்கிறது. சமீபத்தில் கூட ரஷ்யாவிடம் இருந்து நவீன துப்பாக்கிகளை இந்தியா கொள்வனவு செய்திருந்தது. அமெரிக்காவின் நட்பு நாடாக இருந்த பாகிஸ்தானும் மௌனம் காக்கிறது. சமீபத்தில் சீனாவில் நடந்த குளிர்கால ஒலிம்பிக்கில் யார்யார் எந்தப்பக்கம் நின்றார்கள், யார் நடுநிலை வகிக்கிறார்கள் என்பதை ஓரளவு ஊகிக்க முடிந்தது. கியூபா, சீரியா போன்ற நாடுகளின் ஆதரவு இருக்கின்றது.

உக்ரைன் மீதான இந்த ஆக்கிரமிப்புக்கு வெளிப்படையாகக் கூறப்பட்ட காரணங்கள், உக்ரைன் நேட்டோவில் இணையக்கூடாது, ரஷ்ய எல்லைகளில் உள்ள ஏனைய நேட்டோ படைகள் வாபஸ் பெறப்பட வேண்டும், உக்ரைன் அரசியலில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதுதான். அதனால்தான் உக்ரைனின் ஜனநாயக அரசைக் கவிழ்த்துவிட்டு, இராணுவ ஆட்சியைக் கொண்டுவரும்படி உக்ரைன் இராணுவத்திற்கு ரஷ்ய ஜனாதிபதி புடின் வேண்டுகோள் விடுத்தார். உக்ரைனில் உள்ள மக்களில் சுமார் 18 வீதமான மக்கள் ரஷ்ய மொழி பேசக்கூடியவர்களாக இருப்பது மட்டுமல்ல, கிழக்கு எல்லையோரத்தில் உள்ள சில நகரங்களையும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சென்ற வாரம் ஐ.நா. சபையில் உக்ரைன் ஆக்கிரமிப்பு விவகாரம் எடுக்கப்பட்ட போது, அது தோல்வியில் முடிந்தது. வாக்கெடுப்புக்கு விட்டபோது, பதினைந்து நாடுகள் உள்ள சபையில் 11 நாடுகள் ரஷ்யாவுக்கு எதிராகவும், சீனா, இந்தியா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய 3 நாடுகள் மௌனம் காத்தன. 11 நாடுகள் எதிராக வாக்களித்தாலும், ரஷ்யா தனது வீட்டோ வாக்கின் அதிகாரத்தைப் பயன்படுத்தி அமெரிக்காவின் தீர்மானத்தை முறியடித்தது. அமெரிக்கா, ரஷ்யா, ஐக்கிய இராச்சியம், சீனா, பிரான்ஸ் ஆகிய ஐந்து நாடுகளுக்கு ஐ.நாவில் நிரந்தர வீட்டோ அதிகாரம் இருக்கின்றது. இதனால் கோபமடைந்த உக்ரைன் ஐ.நா. அங்கத்தவர் பதவியில் இருந்து ரஷ்யாவை நீக்கும்படி உலக நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்தது.

உக்ரைன் ஒரு தங்கச் சுரங்கமாகவே அல்லது எரிபொருள் கிணறுகளைக் கொண்டதாகவே இருந்திருந்தால் முதல் வேலையாக எல்லோரும் அதைப் பாதுகாக்கப் போயிருப்பார்கள். இங்கே தலையைக் கொடுப்பதால், எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை என்பதால் எல்லா நாடுகளும் எட்ட நின்று கொண்டு அறிக்கைகள் மட்டும் விட்டுக் கொண்டிருக்கின்றன. மனித நேயத்தை விட எல்லாமே தமது நன்மை கருதித் தான் நடக்கின்றன.

இதற்கிடையில் ரஷ்யாவுக்கான உதவித்திட்டங்கள் அமெரிக்காவால் நிறுத்தப்பட்டிருப்பதால், சுமார் 500 தொன் எடை கொண்ட விண்வெளி நிலையத்தின் பராமரிப்புக்கும் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. இந்த விண்வெளி நிலையத்தை ரஷ்யா, அமெரிக்கா, கனடா, ஜப்பான், பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின் போன்ற நாடுகள் இணைந்து பராமரிக்கின்றன. பராமரிப்பு கைவிடப்பட்டால் எந்த நேரமும் விண்வெளி நிலையம் உடைந்து விழலாம் எனவும், அப்படி விழும் பட்சத்தில் இந்தியா, சீனா போன்ற நாடுகள் மீதும் விழலாம் என்று ரஸ்யாவின் விண்வெளித்துறைத் தலைமை அதிகாரி அறிவித்திருக்கின்றார்.

சீனா தனக்கென ஒரு விண்வெளி நிலையத்தை விண்வெளியில் கட்டிக் கொண்டிருப்பதையும், ஐ.நா. சபையில் இந்தியாவும், சீனாவும் ரஷ்யாவுக்கு ஆதரவு வழங்கி இருந்தமையும் இங்கே குறிப்பிடத்தக்கது.

தமிழிலே ஒரு பழமொழி இருக்கிறது ‘அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்டது’ போல, உக்ரைன் அயல் நாடான ரஷ்யாவுடன் உறவைப் பேணாது, ஐரோப்பிய, மேலை நாடுகளை நம்பியதால் இன்று தனித்துப்போய் நிற்கின்றது. உக்ரைனுக்குச் சொந்தமான தெற்குப் பகுதியில் உள்ள செபஸ்டபுள் துறைமுகத்தின் மூலம்தான் ரஷ்யாவின் கடல்வழி வர்த்தகப் போக்குவரத்து நடக்கிறது. ரஷ்யாவுக்கு வடக்கே வடதுருவப் பெரிய கடற்பகுதி இருந்தாலும் அது பெரும்பாலும் உறை நிலையிலேயே இருக்கின்றது. அதனால்தான் 2013 ஆம் ஆண்டு ரஷ்யா உக்ரைனின் கிரிமியாவைக் கைப்பற்றி இந்தத் துறைமுகத்தையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந் தது. நேட்டோவில் உக்ரைன் அங்கத்தவராகச் சேர்ந்தால், இந்தத் துறைமுகம் பறிபோய்விடலாம் என்ற பயம் ரஷ்யாவுக்கு இருந்ததால், இப்பகுதியில் நேட்டோ படைகளின் வருகையைத் தடுப்பதும் ரஷ்யாவின் இந்த ஆக்கிரமிப்புக்கு ஒரு காரணமாகும்.

சென்ற வியாழக்கிழமை ரஷ்ய மக்கள் இந்த ஆக்கிரமிப்புக்கு எதிராகத் தெருக்களில் இறங்கி போராடினார்கள். ஆனால் ரஷ்யாவில் இப்படியான போராட் டங்கள் உடனடியாக அடக்கப்பட்டுவிடும் என்பது உலகறிந்த விடயமாகும். இந்த ரஷ்ய ஆக்கிரமிப்பு எந்தவித எதிர்பும் இல்லாமல் வெற்றி பெறுமானால் இன்னும் சில நாடுகள் இதுபோன்ற தங்கள் பிரச்சனைக்குரிய நிலங்களை ஆக்கிரமிக்கத் தயாராக இருக்கின்றன. வீட்டோ அதிகாரமும் சில நாடுகளுக்கு இருப்பதால் அவர் களுக்கு இது பச்சைக் கொடி காட்டியது போலாகிவிடலாம். ஸ்வீடன் உக்ரைனுக்கு ஆயுதங்களைக் கொடுத்து உதவியது காரணமாக ரஷ்யா ஜனாதிபதி ஸ்வீடனையும், பின்லாந்தையும் எச்சரிக்கை செய்திருக்கின்றார். இதே சமயம் ரஷ்யாவுக்குச் சொந்தமான கப்பல் ஒன்றை பிரான்ஸ் தடுத்து வைத்திருக்கின்றது. தடை செய்யப்பட்ட ரஷ்ய வங்கியின் பெயரில் அந்தக் கப்பல் இருக்கலாமோ என்ற சந்தேகத்தில் தடுத்து வைத்து விசாரணைகள் நடைபெறுவதாகத் தெரிகின்றது. ஹோஸ்டோமல் விமான நிலை யத்தில் தரித்து நின்ற உக்ரைனுக்குச் சொந்தமான உலகின் மிகப் பெரிய சரக்கு விமானம் குண்டுத் தாக்குதலால் அழிக்கப்பட்டது.

சர்வதேச ஒலிம்பிக் குழு ரஷ்யாவிலும், பெலாரஸிலும் நடக்கவிருந்த போட்டிகளைத் தடைசெய்திருக்கின்றது. அந்த நாடுகளின் கொடியை ஏற்றுவதையும், தேசிய கீதத்தைப் பாடுவதையும் நிறுத்தி வைக்கும்படியும் கேட்கப்பட்டிருக்கின்றது. கடந்த 14 வருடங்களில் 3 தடவைகள் ரஷ்யா விதிகளை மீறியிருக்கின்றது. 2008 ஆம் ஆண்டு ஜோர்ஜியாவை முற்றுகையிட்டும், 2014 ஆம் ஆண்டு கிரிமியாவைக் கைப்பற்றியும் இருந்தது. ரஷ்யாவுடன் உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்ள போலாந்தும், சுவீடனும் மறுத்து விட்டன. உக்ரைனுக்கு ஆதரவாக பாரிஸ் கோபுரத்திலும், கனடா நயாகரா நீர்வீழ்ச்சியிலும் உக்ரையின் நாட்டுக் கொடியின் நிறங்களான நீலம், மஞ்சள் நிறங்களில் ஒளி பாய்ச்சப்பட்டிருக்கின்றன.

உக்ரைன் தனது பாதுகாப்பிற்காக ‘உக்ரைன் பிராந்திய பாதுகாப்புக்கான சர்வதேச படை’ ஒன்றை உருவாக்க இருக்கின்றது என்று உக்ரைன் வெளியுறவு துறை அமைச்சர் டிமிட்ரியோ குலேபா குறிப்பிட்டார். ருமேனியா, பல்கேரியா, போலாந்து, செக்குடியரசு விமானங்கள் தனது வான்வெளியைப் பாவிப்பதற்கு ரஷ்யா தடைவிதித்தது. இதே சமயம் லாட்வியா, எஸ்டோனியா, லிதுவேனியா, ஸ்லோவேனியா, கனடா, ஜெர்மனி, போச்சுக்கல் போன்ற நாடுகள் உட்பட ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தமது வான்வெளியைப் பாவிப்பதற்கு ரஸ்யாவிற்குத் தடை விதித்திருக்கின்றன. உயிராபத்தை ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கு உக்ரைனுக்கு நிதி உதவி செய்ய இருப்பதாக அவுஸ்ரேலியப் பிரதமர் தெரிவித்திருந்தார். பெல்ஜியமும் ஆயுதங்களை வழங்குகிறது. அமெரிக்காவும் விமான எதிர்ப்பு பீரங்கிகளை நேரடியாக வழங்க முன்வந்திருக்கின்றது. இந்த நாடுகளின் முடிவுகளால், இரண்டாம் உலகயுத்தத்தில் எப்படி அமெரிக்கா வலிந்து உள்வாங்கப்பட்டதோ, அதே போல இம்முறை ரஸ்யாவுக்கு ஆதரவாகச் சீனா உள்வாங்கப்படலாம். இரண்டு வல்லரசுகள் ஒன்றாகச் சேர்ந்தால் என்ன நடக்கும் என்பது தெரிந்தது தானே!

உக்ரைன் ஆக்கிரமிப்பின் எதிரொலி இலங்கையையும் பாதிக்கலாம். தேயிலை ஏற்றுமதி, சுற்றுலாப்பயணத்துறை போன்றவற்றின் வருமானம் பாதிக்கப்படலாம். இதைவிட எரிபொருள் போன்றவற்றுக்குத் தட்டுப்பாடு, விலை உயர்வு போன்றவற்றை எதிர்கொள்ள வேண்டி வரலாம். இதனால் டொலர் தட் டுப்பாடு ஏற்படலாம்.

உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி, தலைநகரான கிய்வ் நகரைவிட்டுப் போக மாட்டேன் என்று அறிவித்திருக்கின்றார். அமெரிக்கா அவரைக் காப்பாற்றி வெளியே கொண்டுவர முனைந்தாலும் அவர் தனது சொந்த மண்ணை விட்டு வெளியேற மறுத்து விட்டார். ‘நீங்கள் உள்ளே வந்தால் எங்கள் முதுகை எதிர் கொள்ளமாட்டீர்கள், எங்கள் முகத்தைத் தான் நேருக்குநேர் எதிர் கொள்வீர்கள்’ என்று ரஷ்ய படைகளுக்கு அவர் சவால் விட்டுள்ளார். இதே போன்ற கம்பீரமான குரல் முன்பு ஒருநாள் முள்ளிவாய்காலிலும் கேட்டது மட்டுமல்ல, செய்கையிலும் சாதித்தும் காட்டப்பட்டது உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம். ■





# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்


கல்வி tv CHANNEL

- 1, 2 ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை ஒத்த உருவைத் தெரிவு செய்க.

1.

(1) (2) (3)


2.

(1) (2) (3)


- உரு A ஐ ஒத்த ஓர் உருவைப் பெறுவதற்கு உரு B இல் செய்ய வேண்டிய மாற்றங்களின் எண்ணிக்கை எத்தனை?

3.

உரு A உரு B

(1) 2 (2) 3 (3) 4


- 4, 5 ஆகிய வினாக்களில் வெறுமையாய் உள்ள அடைப்புக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

4.

(1) (2) (3)

5.

(1) (2) (3)

6. ஒரே கூட்டத்தைச் சேர்ந்த பொருள்கள் இடம்பெறும் அடைப்பைத் தெரிவு செய்க.

(1) (2) (3)

7. கட்டத்தினுள் உள்ள தொகுதியுடன் சேர்ப்பதற்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

(1) (2) (3)

## விடைகள்

1. (2) 2. (1) 3. (2) 4. (3) 5. (2) 6. (3) 7. (3)

---

கல்வி tv CHANNEL-1

**02.03.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி tv CHANNEL - 2

**02.03.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

பயங்கரவாத சட்டத்தை நீக்கக் கோரி

# கல்முனை நகர சபையில் தீர்மானம் நிறைவேறியது



கல்முனை மாநகர சபையின் 47ஆவது மாதாந்த பொது அமர்வு மாநகர மேயர் ஏ.எம். றகீப் தலைமையில் நேற்றுமுன் தினம் நடைபெற்றது.

கல்முனை, மார்ச் 02

**நாட்டில் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரி கல்முனை மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

இதன்போது, பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கக் கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான ஹென்றி மகேந்திரன் சபையில் பிரேரணை சமர்ப்பித்திருந்தார். இதனை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினரான சட்டத்தரணி ஆரிகா காரியப்பர் வழிமொழிந்தார்.

இதையடுத்து மாநகர மேயர் உட்பட உறுப்பினர்கள் பலரும் பயங்கரவாதத் தடைச் சட்டம் இரத்துச் செய்யப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி கருத்துரைத்தனர்.

இந்த பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி எவ்வித குற்றமும் இழைக்காத அப்பாவி தமிழ், முஸ்லிம் இளைஞர்களும், புத்திஜீவிகளும் கைதுசெய்யப்பட்டு, வருடக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டு, துன்புறுத்தப்படுகின்றனர் என்று இதன்போது அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதேவேளை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எம். எஸ். எம். நிஸார் இந்தப் பிரேரணைக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்த நிலையில், சபைக்குச் சமுகமளித்திருந்த ஏனைய அனைத்து உறுப்பினர்களினதும் ஆதரவுடன் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. (ஐ)



# தென்னை நார் தொழிற்சாலை திருகோணமலையில் திறப்பு!

கந்தளாய், மார்ச் 02

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் அக்போபுர பகுதியில் தென்னை நார் தொழிற்சாலை திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில அத்துக்கோரளவால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

ஐரோப்பிய சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யும் நோக்கில் இந்தத் தென்னை நார் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது.

தேங்காய் மட்டைகளைப் பயன்படுத்தி பல்வேறு வகையான தென்னை சார்ந்த பொருட்கள் இதன் மூலம் உற்பத்தி செய்யப்படவுள்ளன.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நிதி அமைச்சர் தலைமையிலான தற்போதைய அரசு முன் வைத்த 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் முக்கிய நோக்கம் கிராமிய பொருளாதாரத்தை உயர்த்துவதும், உற்பத்தியை ஊக்குவிப்பதும், உற்பத்தி பொருளாதாரத்தை நாட்டில் கட்டியெழுப்புவதுமாகும். எனவே, 2022ஆம் ஆண்டுக் கான பட்ஜட் ஒதுக்கீட்டில் இருந்து இந்தத் தொழிற்சாலையின் வளர்ச்சிக்கு நிதி ஒதுக்கப்படவுள்ளது எனத் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில அத்துக்கோரள தெரிவித்தார். (ஐ)

# குச்சவெளியில் சடலம் மீட்பு



திருகோணமலை, மார்ச் 02

திருகோணமலை - குச்சவெளி - கும்புறுபிட்டி பகுதியில், ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியைச் சேர்ந்த, நான்கு பிள்ளைகளின் தந்தையான, 46 வயதுடைய ஒருவரின் சடலமே நேற்று முன்தினம் மீட்கப்பட்டதாக குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

அவரின் மரணத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

இந்த நிலையில், சடலம் மீதான நீதிவான் பரிசோதனைகள் இடம்பெறவுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# கொக்கட்டிச்சோலையில் கசிப்பு நிலையம் முற்றுகை

மட்டக்களப்பு, மார்ச் 02

கொக்கட்டிச்சோலை - சாமந்தியாறு - பனையறுப்பான் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையங்கள் முற்றுகையிடப்பட்டன.

இதன்போது பெரும் எண்ணிக்கையிலான கோடாவுடனான பரல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று கொக்கட்டிச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட புலனாய்வுப் பிரிவு மற்றும் மாவட்ட புலனாய்வு பிரிவு ஆகியோருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய கொக்கட்டிச்சோலை பொலிஸ் பொறுப்பதிகாரி நளீன் குணவர்த்தன, போதைப்பொருள் ஒழிப்பு பொறுப்பதிகாரி ஆகியோர்களின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சட்ட விரோதமாக இயங்கி வந்த உற்பத்தி நிலையங்கள் முற்றுகையிடப்பட்டன.

இதன்போது, 3 ஆயிரத்து 960லீற்றர் கோடா, 100 லீற்றர் கசிப்பு, கசிப்பு உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டன.

# தோற்றாதீவு பிள்ளையார் ஆலயத்தில் சிவராத்திரி!





மட்டக்களப்பு, மார்ச் 02

மகா சிவராத்திரி விரத நிகழ்வுகள் நேற்று இலங்கையின் மிகஉயரமான சுதை விக்கிரக ராஜகோபுரத்தை உடைய மட்டக்களப்பு தேற்றாத்தீவு கொம்புச்சந்தி பிள்ளையார் ஆலயத்தில் முதல் ஆரம்பமாகியது.

ஆலயத்திற்கு சித்தர்களால் நர்மதா நதி கரையில் கண்டெடுக்கப்பட்ட உயிர் சிவலிங்கத்திற்கு அடியார்கள் தங்கள் கைகளால் அபிஷேகம் பண்ணும் நிகழ்வு ஆரம்பமாகியது.

ஆலயத்தின் புனித கங்கையான பாலாறு புஷ்கரணியில் தீர்த்த நீரை எடுத்து வந்து அபிஷேகத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்றது.

இதன்போது தங்கள் ராசிகளுக்கு உரிய அபிஷேக திரவியங்களால் அடியார்கள் அபிஷேகம் செய்வதுடன் மேலும் லிங்கோற்பவ காலத்தில் ஏகாதச ருத்ர வேள்வியும் நடைபெற்றதுடன், நான்கு சாம பூசைகளுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஐ)

# கவிதை நூல் அறிமுகம்!

திருகோணமலை, மார்ச் 02

“அன்பின் பாதை சமூகத்தின்” எண்ணம்போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றம் நடத்திய கவிஞர் வேலணையூர் ரஜிந்தனின் “பேரன்பின் படிமங்கள்” கவிதை நூல் அறிமுக விழா திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாகக் கலந்து கொண்ட திருகோணமலை உயர் தொழில்நுட்பக் கல்லூரி சிரேஷ்ட ஆங்கில விரிவுரையாளர் தங்கராசா ஜீவகன் மற்றும் திருகோணமலை பத்திரகாளி அம்மன் ஆலய ஆதீனகர்த்தா பிரமஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள் ஆகியோர் முதல் பிரதியை பெற்றனர்.

நூல் நயவுரையை கவிஞர் ஷெல்லிதாசன், கவிதாயினி பானு சுதாகரன் ஆகியோர் வழங்கினர். (ஐ)

# பாலசுந்தரம் கொலை வழக்கு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது

மட்டக்களப்பு, பெப். 02

இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் வீட்டுக்கு முன்பாக இடம்பெற்ற துப்பாக்கிசூடு சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் 14ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் வீட்டு வாசலுக்கு முன்பாக சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட மகாலிங்கம் பாலசுந்தரத்தின் வழக்கு விசாரணை நேற்று முன்தினம் மட்டக்களப்பு நீதவான் நீதிபதி ஏ.சி றிஸ்வான் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கில் நீதிமன்றில் பொலிஸாரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை பரிசீலனை செய்த நீதிவான், அறிக்கையில் உள்ள திருத்தங்கள் தொடர்பிலும் ஆராய்ந்து இது தொடர்பான முன்னேற்ற அறிக்கையை எதிர்வரும் வழக்கில் சமர்ப்பிக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதைத் தொடர்ந்து வழக்கு விசாரணையானது எதிர்வரும் 14ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டதுடன், கைது செய்யப்பட்டுள்ள மெயப் பாதுகாவலரின் விளக்கமறிலும் நீடிக்கப்பட்டது. (ஐ)



# இரண்டாம் சுற்றுப் பேச்சுக்கு இரு தரப்புகளும் இணக்கம்!

## புடினுடன் மக்ரோன் மீண்டும் தொலைபேசி வழியே பேச்சு

கீவ், மார்ச் 02

பெலாரஸ் நாட்டின் எல்லையோரம் ரஷ்யா - உக்ரைன் பிரதிநிதிகளுக்கு இடையே நேற்று முன் தினம் நடைபெற்ற அமைதிப் பேச்சுக்கள் முன்னேற்றகரமான முடிவுகள் எதனையும் எட்டாத போதிலும் இரு தரப்புகளும் மீண்டும் சந்தித்துப் பேசுவதற்கு இணங்கியுள்ளன.

உக்ரைன் நாட்டின் சமாதானப் பேச்சுக் குழுவின் மத்தியஸ்தர் ஒருவர் இத்தகவலை உறுதிப்படுத்தி உள்ளார். ரஷ்யாவின் தரப்பைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவர், அடுத்த கட்டப் பேச்சுக்கள் சில தினங்களில் போலந்து-பெலாரஸ் நாடுகளது எல்லையில் நடைபெறும் என்பதை அறிவித்துள்ளார்.

உக்ரைன் தலைநகரை ரஷ்யப் படைகள்நாலாபுறமும் வல்வளைப்புச் செய்ய முயன்று வருகின்றன. நகரிலிருந்து மாபெரும் சனத்திரள் வெளியேற்றம் தொடங்கியுள்ளது.

இந்த நிலையில் இரு தரப்பினரிடையேயான முதலாவது சமாதானப் பேச்சுக்கள் இன்று திங்கள் பகல் பெலாரஸ் நாட்டின் எல்லையோரம் அமைந்துள்ள கோமல் (Gomel) பிராந்தியத்தில் நடைபெற்றது. பேச்சுக்களை முடித்துக் கொண்டு இரு தரப்பினரும் தத்தமது தலைநகரங்களுக்குத் திரும்பி விட்டனர் என்பதை பெலாரஸின் "பெல்ரா" செய்தி நிறுவனம் உறுதிசெய்தது.

பேச்சுக்கள் தொடங்குவதற்கு முன்னராக யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவிக்குமாறு உக்ரைன் அரசு ரஷ்யாவிடம் கோரியிருந்தது. இவ்வாறு சமாதான முயற்சிகள் ஒருபுறம் நடக்கையில் உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஸெலென்ஸ்கி தனது நாடு ஐரோப்பிய ஒன்றியத்தில் உறுப்புரிமை பெற்றுக் கொள்வதற்கான உத்தியோகபூர்வ விண்ணப்பத்தில் இன்று மாலை ஒப்பமிட்டுள்ளார். இத்தகவலையும் அதிபர் ஒப்பமிடும் காட்சியையும் அரசாங்கம் வெளியிட்டிருக்கிறது.

இதேவேளை, பிரான்ஸின் அதிபர் மக்ரோன் இன்று மீண்டும் புடினுடன் சுமார் ஒன்றரை மணிநேரம் தொலைபேசி வாயிலாகப் பேச்சு நடத்தியுள்ளார் என்று எலிஸே மாளிகை தெரிவித்துள்ளது.

சிவிலியன் இழப்புகளைத் தவிர்ப்பது குறித்துக் கவனம் செலுத்தப்படும் என்று புடின் இந்தப் பேச்சின் போது மக்ரோனிடம் உறுதியளித்துள்ளார்.

- 2014 இல் ரஷ்யாவுடன் இணைக்கப்பட்ட கிரிமியாக் (Crimea) குடாவை ரஷ்யாவின் எல்லையாக அங்கீகரிக்க வேண்டும் -
- இராணுவ மயப்படுத்தப்படாத- நாஸிக்களின் பிடியில் இருந்து நீக்கப்பட்ட பக்கம் சாராத ஒரு நாடாக உக்ரைன் மாறப்பட வேண்டும் -

இந்தக் கோரிக்கைகள் ஏற்கப்பட்டால் உக்ரைனில் இருந்து தனது படைகள் விலக்கிக் கொள்ளப்படும் என்று அதிபர் புடின் மக்ரோனிடம் மீண்டும் வலியுறுத்தினார் என்று எலிஸே வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ)

# அடிபணியமாட்டோம்!

## உக்ரைன் உறுதி!

கீவ், மார்ச் 02

ரஷ்யாவிடம் சரணடையவோ, அதன் அழுத்தத்துக்கு அடிபணியவோ மாட்டோம் என உக்ரைன் அரசாங்கம் உறுதியாகத் தெரிவித்துள்ளது.

பேச்சுவார்த்தை மூலமான தீர்வை விரும்பினாலும் சரணடையவோ, ரஷ்யாவின் நிபந்தனைகளை ஏற்கவோமாட்டோம் தயாரில்லை என உக்ரேனிய வெளியுறவு அமைச்சர் திமித்ரோ குலேபா சி.என்.பி.சி. தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

இதேவேளை, கடந்த ஞாயிற்றுக்கிழமை, உக்ரைன் வட - கிழக்கு நகரம் ஒக்டிர்காவில் ரஷ்யாவின் கனரக துப்பாக்கிச் சூட்டு தாக்குதலில் 70 இற்கும் மேற்பட்ட உக்ரைன் படையினர் கொல்லப்பட்டதாக உள்ளூர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதலில், இராணுவ பிரிவு ஒன்று அழிக்கப்பட்டது. உயிரிழந்தவர்களின் சடலங்களை கண்டெடுக்கும் பணியில் மீட்புக் குழுவினர் மற்றும் தன்னார்வலர்கள் ஈடுபட்டுள்ளதாகவும்



சுமி நகர அரச நிர்வாக தலைவர் டிமிட்ரோ லெவிட்ஸ்கி தெரிவித்தார்.

பல பேர் இறந்துள்ளனர். தற்போது உயிரிழந்த 70 உக்ரைன் படையினரை புதைப்பதற்கான இடங்கள் தயாராகி வருகின்றன என அவர் கூறியுள்ளார்.

எதிரிகளுக்கு பலத்த பதிலடி கொடுக்கப்பட்டுள்ளது. ஏராளமான ரஷ்யப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர். ஒக்டிர்கா நகரில் ஏராளமான ரஷ்ய படையினரின் சடலங்கள் உள்ளன. அந்த சடலங்கள் செஞ்சிலுவை சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக சுமி நகர அரச நிர்வாக தலைவர் டிமிட்ரோ லெவிட்ஸ்கி கூறினார். (அ)

# அணு ஆயுதப் போர் குறித்து கவலைப்பட தேவையில்லை

## அமெரிக்க ஜனாதிபதி பைடன்



நியூயோர்க், மார்ச் 02

அணு ஆயுதப் போர் குறித்து அமெரிக்கர்கள் கவலைப்படத் தேவையில்லை என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு போருக்கு எதிராக மேற்கத்தைய நாடுகள் கடும் நடவடிக்கைகளை எடுத்துவரும் நிலையில் ரஷ்ய இராணுவத்தின் அணு ஆயுதப் படை பிரிவைச் விசேட எச்சரிக்கையுடனான தயார் நிலையில் இருக்குமாறு அந்நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புடின் உத்தர விட்டுள்ளார்.

மேற்கத்திய நாடுகள் ரஷ்யாவை நோக்கி மோசமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. மேலும் சட்ட விரோதமான தடைகளையும் விதித்துள்ளன. இதற்கான எதிர்வினை குறித்து விரைவில் அறிவிக்கப்படும் என்றும் புடின் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் அணு ஆயுத யுத்தம் குறித்து அமெரிக்கர்கள் கவலைப்படத் தேவையில்லை என ஜனாதிபதி ஜோ பைடன் நேற்று முன் தினம் திங்கட்கிழமை கூறினார்.

அதேவேளை, அமெரிக்கா தனது அணு ஆயுத படைப் பிரிவை எச்சரிக்கை நிலையில் வைப்பதற்கான தேவை எதுவும் தற்போதைய சூழலில் இல்லை என வெள்ளை மாளிகையின் ஊடகச் செயலாளர் ஜென் சாகி தெரிவித்தார்.

அணு ஆயுதப் படைப்பிரிவின் உச்ச தயார் நிலை வைக்குமாறு ரஷ்ய ஜனாதிபதி புடின் இட்டுள்ள கட்டளை குறித்து நாங்கள் மதிப்பிட்டு வருகிறோம் எனவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவோ அல்லது 30 நாடுகளைக் கொண்ட நேட்டோ கூட்டணியோ ரஷ்யாவுடன் மோதலுக்கு விருப்பவில்லை என்று சாகி கூறினார்.

அணு ஆயுதங்கள் தொடர்பாக இது போன்ற ஆத்திரமூட்டும் புடினின் சொல்லாட்சி ஆபத்தானது. இது தவிர்க்கப்பட வேண்டும் எனவும் ஜென் சாகி குறிப்பிட்டார்.

இதற்கிடையே, அணு ஆயுதங்களை பயன்படுத்துவது பேரழிவு விளைவுகளை ஏற்படுத்தும் என்று ரஷ்யாவும் அமெரிக்காவும் நீண்டகாலமாக ஒப்புக் கொண்டுள்ளதாக வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அணு ஆயுத யுத்தத்தில் யாரையும் யாரும் வெல்ல முடியாது. ஒருபோதும் அணு ஆயுதப் போரில் ஈடுபடக் கூடாது என்பதை உறுதிப்படுத்தும் கூட்டு அறிக்கைகளில் ரஷ்யா கையெழுத்திட்டுள்ளதாக வெள்ளை மாளிகை சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# அவுஸ்ரேலியாவில் திடீரென வெள்ளம்!

## இதுவரை குறைந்தது எட்டு பேர் உயிரிழப்பு!

கான்பரா, மார்ச் 02

கிழக்கு அவுஸ்ரேலியாவில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில், குறைந்தது எட்டு பேர் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குயின்ஸ்லாந்தின் தலைநக ரான பிரிஸ்பேனின் சில பகுதி கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நீருக்குள் மூழ்கின.

2,145 வீடுகள் மற்றும் 2,356 வணிகங்கள் நீரில் மூழ்கியுள்ள தாகவும், 10,827 கட்டடங்க ளின் தரைப் பலகைகளுக்கு மேல் வெள்ள நீர் சூழ்ந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் பெய்து வரும் தொடர் மழையால் பிரிஸ்பேன் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

பிரிஸ்பேனின் தெற்கே உள்ள கோல்ட் கோஸ்ட் சிட்டியில் சூரிய உதயத்திற்கு முன் வெள்ளத்தில் மூழ்கிய 50 வயதுடைய ஒருவர் திங்கள்கிழமை நீரில் மூழ்கி இறந்தார் இதனால். உயிரிழப்பு எண்ணிக்கை எட்டாக உயர்ந்துள்ளது.



குயின்ஸ்லாந்தின் முதல்வர் அன்னாஸ்டாசியா பலாஸ்க்சுக் கூறுகையில், 'இவ்வளவு குறு கிய காலத்தில் இந்த அளவு மழையை யாரும் கண்டதில்லை என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வார்கள் என்று நான் நினைக்கிறேன்' என கூறினார்.

அதிகாரிகளின் கூற்றுப்படி, கடந்த 24 மணி நேரத்தில் அவசர சேவைகள் 130.இற்கும் மேற் பட்டவர்களை மீட்டுள்ள னர். தேடுதல்கள் இன் னும் நடந்து வருகின்றன. (அ)

# செய்தி நிறுவனங்களுக்கும் தடை

## பிரசாரத் தணிக்கைக்கு முஸ்தீபு!!

மொஸ்கோ, மார்ச் 02

போர் என்று வந்துவிட்டால் செய்தித் தணிக்கைகள் வந்துவிடும். உண்மை மறைந்துவிடும். ஐரோப்பிய ஒன்றியம் ரஷ்யாவின் "ஸ்புட்னிக்", "ரஷ்யா ருடே" ஆகிய இரண்டு செய்தி நிறுவனங்களையும் தனது எல்லைக்குள் தடை செய்துள்ளது.

இவை இரண்டும் மொஸ்கோ சார்பு ஊடகங்கள் ஆகும்.தடை அறிவிப்பை வெளியிட்ட ஐரோப்பிய ஆணைக்குழு வின் தலைவர் உர்சுலா வொன் டெர் லேயன் புடினின் போரை நியாயப்படுத்துகின்ற பொய்ப் பிரச்சாரங்களை இவ்விரு ஊடகங்களும் இனிமேல் ஐரோப்பாவில் பரப்ப முடியாது என்று தெரிவித்திருக்கிறார்.

அதேவேளை, ரஷ்யா உக்ரைன் மீது மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை "தாக்குதல்", "ஆக்கிரமிப்பு" அல்லது "போர்ப் பிரகடனம்" போன்ற வார்த்தைகளில் குறிப்பிட்டுச் செய்தி வழங்கினால் தடை அல்லது அபராதம் விதிக்கப்படும் என்று மொஸ்கோவில் உள்ள வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறது.

ரஷ்யாவின் தகவல் தொடர்புக் கட்டுப் பாட்டு மையம் சில வெளிநாட்டுச் செய்தியாளர்களை மேற்கின் முகவர்கள் என்று முத்திரைகுத்தி அவர்கள் மீதுகட்டுப்பாடுகளை விதித்து வருக்கிறது என்று அல்ஜெஸீரா ஊடகம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# லியோன் ஓப்பன் வென்றார் கேட்டி

லண்டன், மார்ச் 02

பிரிட்டனின் கேட்டி போல்டர் லியோன் ஓப்பனில் அனா கொன்ஜூவை வீழ்த்தினார்.

குரோஷியாவின் ஆறாம் நிலை வீராங்கனையான கொன்ஜூவை 5 -7, 6 - 0, 6 -3 என்ற செற் கணக்கில் வீழ்த்தினார். இதன்மூலம் அவர் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

அடுத்த சுற்றில் கேட்டி ஹங்கேரியின் அன்னா பொண்டாரை எதிர்கொள்கிறார்.

மற்றோர் போட்டியில் பிரிட்டனின் ஹீதர் வட்சனும் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். (ஐ)





# சாதனையை தக்கவைத்தது தென்னாபிரிக்கா அணி!

கிறிஸ்ட்சேர்ச், மார்ச் 02

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்டை 198 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று டெஸ்ட் தொடரை சமன் செய்துள்ளது தென்னாபிரிக்க அணி.

கிறிஸ்ட்சர்ச்சில் நடைபெற்று வரும் 2ஆவது டெஸ்டில் முதலில் துடுப்பெடுத்தாடியசெய்த தென்னாபிரிக்க அணி, 133 ஓவர்களில் 364 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. எர்வீ 108 ஓட்டங்கள் எடுத்தார்.

மேட் ஹென்றி 3 விக்கெட்களையும் வோக்னர் 4 விக்கெட்களையும் வீழ்த்தினார்கள்.

நியூசிலாந்து அணி முதல் இனிங்ஸில் 80 ஓவர்களில் 293 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. மிற்செல் 60, காலின் டி கிராண்ட்ஹோம் 120 ஓட்டங்கள் எடுத்தார்கள்.

ரபாடா 5 விக்கெட்களையும் யான்சென் 4 விக்கெட்களையும் வீழ்த்தினார்கள்.

தென்னாபிரிக்க அணி 2ஆவது இனிங்ஸிலும் சிறப்பாக விளையாடி 100 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 354 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

விக்கெட் காப்பாளர் கைல் வெர்ரீன் 136 ஓட்டங்களும் ரபாடா 47 ஓட்டங்களும் எடுத்தார்கள். இதனால் 2ஆவது டெஸ்டில் வெற்றி பெற்று தொடரை வெல்ல நியூசிலாந்து அணிக்கு 426 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இந்நிலையில், பதிலுக்கு தனது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி நேற்று, 93.5 ஓவர்களில் 227 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

கொன்வே 92, பிளெண்டல் 44 ஓட்டங்களை எடுத்தார்கள். ரபாடா, யான்சென், மஹராஜ் ஆகியோர் சிறப்பாக பந்துவீசி தலா 3 விக்கெட்களை வீழ்த்தினார்கள்.

கடைசி நாளில் 61 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்களை இழந்து தோல்வியடைந்தது நியூசிலாந்து அணி.

இரண்டாவது டெஸ்ட் போட்டியை வென்றமையால் தென்னாபிரிக்க அணி, நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை 1-1 என சமன் செய்தது. இதன்மூலம் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் தென்னாபிரிக்க அணி இதுவரை தோல்வியடைந்ததேயில்லை என்ற சாதனையையும் அந்த அணி தக்க வைத்தது. (ஐ)

# உலகக் கிண்ண உதைபந்து ரஷ்யா அணி நீக்கப்பட்டது!

## மகளிர் அணிமீதான தடையும் நீடிப்பு

லண்டன், மார்ச் 02

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் இருந்து ரஷ்யா நீக்கப்பட்டுள்ளதாக பிபாவும் ஐக்கிய ஐரோப்பிய உதைபந்தாட்ட சங்கமும் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சகலவிதமான சர்வதேச விளையாட்டுப் போட்டிகளிலிருந்தும் ரஷ்யாவுக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டமையைத் தொடர்ந்து உலகக் கிண்ண உதைபந்தாட்டத்திலிருந்து ரஷ்யாவை மறு அறிவித்தல் வரை நீக்கியுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உக்ரைன்மீது ரஷ்யா போர் தொடுத்ததை கண்டிக்கும் வகையிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், ரஷ்யாவின் பலம்வாய்ந்த எரிசக்தி நிறுவனமான கெஸ்ப்ரொம் நிறுவனத்துடனான பங்காளித்துவத்தை ஐக்கிய ஐரோப்பிய உதைபந்தாட்ட சங்கம் முடிவுக்குக் கொண்டுவந்துள்ளது.

கட்டார் 2022 உலகக் கிண்ணப் போட்டிக்கு முன்னோடியாக இந்த மாதம் நடைபெறவுள்ள தீர்மானம் மிக்க ப்ளே ஓவ் (ஐரோப்பிய வலயம்) போட்டியில் ரஷ்ய அணி விளையாடுவதாக இருந்தது.

அதேவேளை, இங்கிலாந்தில் ஜூலை மாதம் நடைபெறவுள்ள ஐரோப்பிய சம்பியன்ஷிப் உதைபந்தாட்டத்தில் விளையாடுவதற்கு ரஷ்ய மகளிர் அணி ஏற்கனவே தகுதிபெற்றுவிட்டது.

“அனைத்து ரஷ்ய அணிகளையும் - தேசிய அணிகளாக இருந்தாலும் சரி அல்லது கழக அணிகளாக இருந்தாலும் சரி - மறு அறிவித்தல்வரை பிபா மற்றும் ஐக்கிய ஐரோப்பிய உதைபந்தாட்ட சங்க போட்டிகளிலிருந்து இடைநிறுத்துவதற்கு பிபாவும் ஐக்கிய ஐரோப்பிய உதைபந்தாட்ட சங்கமும் தீர்மானித்துள்ளன என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ரஷ்ய, பெலாரஸ் வீரர்களுக்கு ஒலிம்பிக் குழு தடை விதிப்பு!

லண்டன், மார்ச் 02

சர்வதேச விளையாட்டு கூட்டமைப்புகள் மற்றும் விளையாட்டு ஏற்பாட்டாளர்கள் ரஷ்யா மற்றும் பெலாரஸ் வீரர்களுக்கு அழைப்பு விடுக்கக்கூடாது என சர்வதேச ஒலிம்பிக் குழுவின் நிர்வாக பரிந்துரைத்துள்ளது.

உக்ரைன் மீது ரஷியா 5-வது நாளாக தீவிர இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும்நிலையில், சர்வதேச நாடுகள் ரஷியா மீது பல்வேறு பொருளாதார தடைகளை விதித்து வருகின்றன.

இந்த நிலையில், சர்வதேச ஒலிம்பிக் குழுவும் ரஷ்யா மற்றும் உக்ரைன் போரில் ரஷ்யாவுக்கு ஆதரவாக நிற்கும் பெலாரஸ்மீது நடவடிக்கைளை எடுத்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பின் அறிக்கையில்,

“உலகளவிலுள்ள சர்வதேச விளையாட்டு கூட்டமைப்புகள் மற்றும் விளையாட்டு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் அனைவரும் தங்களது அதிகாரத்துக்குள்பட்டு ரஷ்யா அல்லது பெலாரஸ் நாட்டிலிருந்து விளையாட்டு வீரர் அல்லது விளையாடு அதிகாரி எவரும் ரஷ்யா மற்றும் பெலாரஸ் நாட்டுப் பிரதிநிகளாகப் பங்கேற்பதை அனுமதிக்கக் கூடாது. ரஷ்யா அல்லது பெலாரஸ் நாட்டைச் சேர்ந்த தனிநபரோ அல்லது அணியோ அவர்களை நாடற்ற வீரர் அல்லது நாடற்ற அணியாகவே ஏற்றுக்கொள்ள வேண்டும். தேசிய சின்னமோ, நிறமோ, கொடியோ அல்லது கீதமோ காட்சிப்படுத்தக்கூடாது.” என்றுள்ளது.






# ஐ. பி. எல். தொடரிலிருந்து இங்கிலாந்து வீரர் விலகல்!

லண்டன், மார்ச் 02

குஜராத் ரைட்டன்ஸ் அணியைச் சேர்ந்த பிரபல இங்கிலாந்து வீரர் ஜசன் றோய் ஐ. பி. எல். தொடரிலிருந்து விலகியுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற ஏலத்தில் ஜசன் றோயை குஜராத் அணி 2 கோடி இந்திய ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்திருந்தது.

31 வயதான றோய், அண்மையில் முடிவடைந்த பி.எஸ்.எல். இருபது - 20 போட்டியில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்களில் ஒருவராக இருந்தார். 6 போட்டிகளில் ஒரு சதம், இரு அரை சதங்கள் உள்பட 303 ஓட்டங்களை அவர் எடுத்திருந்தார்.

2020இல் டில்லி அணி அவரை 1.5 கோடி இந்திய ரூபாய்க்கும் தெரிவு செய்திருந்தது. ஆனால், தனிப்பட்ட காரணங்களால் அந்த ஆண்டு அவர் போட்டியில் விளையாடவில்லை.

இந்தநிலையில், இம்முறை கொரோனா பாதுகாப்பு வலயத்தில் அதிக நாட்கள் இருக்க முடியாது என்பதற்காகவே தாம் தொடரிலிருந்து விலகுகிறார் என்று றோய் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து வீரரான ஜசன் றோய், அந்த அணிக்காக 5 டெஸ்ட், 98 ஒருநாள், 58 இருபது - 20 போட்டிகளில் விளையாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தொடரும் எரிபொருள் நெருக்கடி நிலைமை!

## பயணிகள் பஸ் சேவைகளும் மட்டுப்படுத்தப்படும்

*வவுனியா, மார்ச் 02*

*வவுனியா மாவட்டத்தில் இருந்து பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பஸ்களுக்கு சுழற்சிமுறையில் எரிபொருள் கிடைப்பதற்கான வழிவகைகளை ஏற்படுத்தி தருமாறு வவுனியா மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ராஜேஸ்வரன் தெரிவித்தார்.*

*தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி நிலமை தொடர்பாக வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு கூறினார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில்-*

*தனியார் பஸ் தரப்பினராகிய நாங்கள் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் மக்களுக்கான சேவைகளை வழங்கிவருகின்றோம். குறிப்பாக பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் எமது பஸ்களுக்கான எரிபொருள் மிகவும் தாமதமாகவே எரிபொருள் நிரப்புநிலையங்களில் இருந்து கிடைக்கின்றது. இதனால் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளையே வழங்கவேண்டிய நிலையில் இருக்கிறோம்.*

*எதிர்வரும் வாரத்தில் பாடசாலைகளும் ஆரம்பமாக இருக்கின்றன. எனவே இந்த நிலமை நீடித்தால் பாடசாலை மாணவர்களுக்கான சேவைகளை வழங்குவதிலும் பாரிய சிக்கல் நிலமை இருக்கின்றது. எனவே பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பஸ்களுக்கு நாளாந்தம் தேவையான எரிபொருளை சுழற்சிமுறையில் வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு அதிகாரிகளை கேட்டுக் கொள்கின்றோம்.*

*இதேவேளை அடுத்த வாரமளவில் கொழும்பில் இருந்து வடக்குக்கு வரும் ரயில் சேவைகள் ரயில்பாதை புனரமைப்பு பணிகளுக்காக இடைநிறுத்தப்படவுள்ளன. எனவே பயணிகள் மேலும் அசௌகரியங்களை சந்திக்கவேண்டிய நிலை ஏற்படும்.*

*எனவே கொழும்பு சேவையில் ஈடுபடும் பஸ்கள் மற்றும் வடக்குக்குள் சேவையில் ஈடுபடும் பேருந்துகளிற்கு உரியநேரத்தில் எரிபொருள் கிடைப்பதற்கு ஆவன செய்யுமாறு வடமாகாண ஆளுநர் மற்றும் மாவட்ட அரச அதிபரிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.*

*அத்துடன் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளை வழங்கும் ஊழியர்களுக்கு கையூட்டு கொடுத்தே எரிபொருளை பெற்றுக் கொள்ள வேண்டிய நிலமை இருக்கின்றது. எனவே எரிபொருள் நிரப்பு நிலையங்களில் என்ன நடக்கிறது என்று பரிசோதனை செய்யுமாறு பொலிஸாரை கேட்டுக்கொள்கின்றோம்.*

*தற்போது வரை எமது முழுமையான சேவைகளை வழங்கி வருகின்றோம். ஓரிரு தினங்களில் எரிபொருள் சீராக கிடைக்காவிட்டால் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளையே வழங்கவேண்டிய நிலை ஏற்படும்-என்றார். (அ)*

# வவுனியாவில் நெற்செய்கையாளர்கள் எரிபொருள் இன்மையினால் பாதிப்பு!

*வவுனியா, மார்ச் 01*

*வவுனியாவில் நெற்செய்கையாளர்கள் எரிபொருள் இன்மையினால் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.*

*பெரும்போக நெற்செய்கையானது வவுனியா மாவட்டத்தில் 22000 ஹெக்ரேயரில் மேற்கொள்ளப்பட்டதுடன் அறுவடையும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.*

*இந்நிலையில் விவசாயிகள் அறுவடையினை மேற்கொள்வதில் இன்னலுக்குள்ளாகியுள்ளனர்.*

*குறிப்பாக கடந்த சில நாட்களாக எரிபொருளுக்கு நாட்டில் பாரிய தட்டுப்பாடு காரணமாக அறுவடை இயந்திரந்திரங்களிற்கான எரிபொருட்களை விவசாயிகள் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.*

*அவ்வாறு பெறுவதாக இருந்தாலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதுடன், அவ்வாறு கிடைக்கும் எரிபொருட்களும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கிடைக்கும் நிலையே தற்போது காணப்படுகின்றது. இதன் காரணமாக விவசாயிகள் தாங்கள் விதைத்த நெல்லினை அறுவடை செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கள்ளாகியுள்ளனர்.*

*மேலும் பெரும்போக நெற்செய்கை ஆரம்பத்தில் இருந்து உரம், கிருமிநாசினிகளுக்கான தடை போன்ற காரணங்களினால் ஏற்கனவே விளைச்சல் குறைந்த நிலையில் தற்போது எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக சிறிது நெல்லை கூட பெற முடியாமல் போய் விடுமோ என்ற அச்சநிலை தற்போது விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.*

*இதேவேளை 6000 ஹெக்ரேயரில் சிறுபோக நெற்செய்கை வவுனியா மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்நிலையில் சிறுபோக நெற்செய்கையினை மேற்கொள்வது கேள்விக்குறியாகவே உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். (அ)*

# அடுத்த வாரம் முதல் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க அரசு நடவடிக்கை

*கொழும்பு, மார்ச் 02*

*2021/2022 பெரும் போகத்தில் நெல் அறுவடை குறைவினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஹெக்ரேயர் ஒன்றுக்கு அதிகபட்சமாக 50 ரூபா இழப்பீடு வழங்குவதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.*

*இன்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே இதனைத் தெரிவித்தார்.*

*"இரசாயன உர இறக்குமதியை அரச கடந்த வருடம் ஏப்ரல் மாதம் தடை செய்தது.*

*எனவே, 2021ஆம் ஆண்டு பெரும் போகத்தில் விவசாயிகள் 8 லட்சம் ஹெக்டர் நிலப்பரப்பில் கரிம உரங்க ளைப் பயன்படுத்தி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.*

*எவ்வாறாயினும் உரிய நேரத்தில் கரிம உரங்களை வழங்கவோ அல்லது இது தொடர்பில் விவசாயிகளுக்கு தெரிவிக்கவோ அமைச்சு தவறியதால் விவசாயிகளின் விளைச்சல் குறைந்துள்ளது.*

*விவசாயிகளுக்கு எவ்வித அநீதியும் ஏற்படாது. அறுவடை குறையும் பட்சத்தில் அவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும்.*

*அதன்படி, பெரும் போகத்தில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்ட 1.1 மில்லியன் விவசாயிகளுக்கு அடுத்த வாரம் முதல் இழப்பீடு வழங்கப்படும்" என்றும் விவசாய அமைச்சர் கூறினார். (அ)*

# 18 இலட்சம் பரல் பெற்றோல் இறக்குமதிக்கு அனுமதி

*கொழும்பு, மார்ச் 02*

*பெப்ரவரி 15ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 14ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 18 இலட்சம் பீப்பாய்கள் பெற்றோலை இறக்குமதி செய்வதற்கான ஒப்பந்தத்தை ஐக்கிய அரபு அமீரகத்தைச் சேர்ந்த நிறுவனமொன்றுக்கு வழங்கும் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.*

*நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட யோசனைக்கே அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.*

*இலங்கை தற்போது கடும் எரிபொருள் பற்றாக்குறையை எதிர்கொண்டு வருகிறது. டொலர் பற்றாக்குறை காரணமாக எரிபொருட்களை இறக்கு மதிசெய்ய முடியாததால் இந் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் நாட்டின் தினசரி நீண்ட நேர மின்வெட்டு அமுல் செய்யப் பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.(ஐ)*


# மரண அறிவித்தல்



தோற்றம் 04 - 09 - 1945

மறைவு 27 - 02 - 2022

## நாகலிங்கம் தர்மலிங்கம்

*(லிங்கம் ஸ்டோர்ஸ் உரிமையாளர் - நெடுங்கேணி)*

யாழ். காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தை உருத்திராமாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தர்மலிங்கம் அவர்கள் 27.02.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற நாகலிங்கம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னம்பலம் - பரமேஸ்வரி தம்பதிகயரின் அன்பு மருமகனும், சுவர்ணம்(தேவி) அவர்களின் அன்புக் கணவரும்,சுதாகரன் (Husky retailer - கனடா), பிரபாகரன் (Master of Science) (கனடா), கார்த்திகா(யுயுவு)(பிரித்தா னியா), ஐங்கரன் (Master of Engineering), அரிகரன் (Master of Science) (ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிந்துஜா (கனடா), தயானி (B.Sc)(கனடா), சயந்தன் (M.Sc)(பிரித்தானியா), தயாந்திக்கா (MBA), சபீனா (B.Sc,ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும்,நேயன், சனுஷ், மகிழினி, ருத்விக்கா ஆகியோரின் பாசமிகு பேரனும்,காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம்(லிங்கம் ஸ்டோர்ஸ்), பாக்கியலட்சுமி(கொழும்பு) மற்றும் மகாலிங்கம்(லிங்கம் ஸ்டோர்ஸ்), ரதிதேவி(கொழும்பு), சரோஜினிதேவி(கனடா), பத்மசோதி (லண்டன்), தனலட்சுமி(லண்டன்), அமிர்தலிங்கம்(லண்டன்), கமலாம்பிகை (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான செல்வராசா, சபாநாயகம், பரமேஸ்வரன் மற்றும் விஜயலட்சுமி, நிர்மலாதேவி, நித்தியானந்தன், சிவராசா, ஜீவா, சிவபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,பத்துமாவதி, பரஞ்சோதி, பரமராசா, நாகம்மா, காலஞ்சென்ற செல்வராசா, கமலா தேவி, காலஞ்சென்றவர்களான லோகேஸ்வரி, இரத்தினசிங்கம் ஆகி யோரின் அன்பு மைத்துனரும்,பாலச்சந்திரன்(பிரதேசசபை உறுப்பி னர்- காரைநகர்), நிமலேஸ்வரன்(இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாப னம் - யாழ்ப்பாணம்), விக்னேஸ்வரன்(முன்னாள் கல்விப்பணிப் பாளர்- வடமாகாணம்), குணரத்தினம்(S.V.முருகேசு உரிமையாளர்), ஜெகநாதன்(வர்த்தகர் - பிரான்ஸ்) ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 01.03.2022 செவ்வாய்க்கிழமை அன்று பொரளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் மு.ப 08:00 மணி முதல் பி.ப 05:00 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் 02.03.2022 புதன்கிழமை அன்று காரைநகர் புதுறோட்டு இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 03.03.2022 வியாழக்கிழமை அன்று மு.ப 08:00 மணியளவில் அவரது காரைநகர் புதுறோட்டு இல்லத்தில் இறுதிக் கிரியை நடைபெற்று பின்னர் சாம்பலாடை இந்து மயானத்தில் தகனம்செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொடர்புகளுக்கு:*
**சுவர்ணம்(தேவி) - மனைவி** Mobile : +94112361297
**சுதாகரன் - மகன்** Mobile : +14165648287
**ஐங்கரன் - மகன்** Mobile : +94775189203

தகவல்:
**குடும்பத்தினர்.**

## புலிகளால்...

என சுட்டிக்காட்டினார்.

மேலும், டொலர் பிரச்னைக்கு தீர்வு காணும் வரை எரிபொருள் நெருக்கடி தொடரும் என்றும் எதிர்வரும் 4 நாட்க ளுக்கு தேவையான எரிபொருள் மாத் திரமே கையிருப்பில் உள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும் இறக்குமதி செய்யும் போது அரசாங்கம் மருந்து, எரிபொருள், தொழில்துறை பொருட்களுக்கு முன்னு ரிமை வழங்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

கடந்த வருடம் 21 பில்லியன் டொலர்கள் செலவு ஏற்பட்டபோதும் அதில் எரிபொருளை இறக்குமதிக்கு 2.8 பில்லியன் டொலர்களே செலவிடப் பட்டதாக அமைச்சர் தெரிவித்தார். (அ)

## இலங்கை...

பதிலளிப் பது தொடர்பிலும் இதன்போது விரி வாக கலந்துரையாடப்பட்டுள்ளதாக இலங்கை தூதுக்குழுவில் அங்கம் வகிக் கும் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

அரசாங்கத்தின் சார்பில் ஐ.நா மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் விடயங்களை முன் வைப்பதற்காக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், நீதியமைச்சர் அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன, வெளிவிவகார அமைச் சின் செயலாளர் பேராசிரியர் ஜயனாத் கொலம்பகே ஆகியோர் தயார் நிலை யில் உள்ளனர்.

இம்முறை கூட்டத்தொடரில் இலங் கையின் மனித உரிமைகள் நிலைமைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் எழுத்துமூல அறிக்கையை சமர்ப்பிக்க வுள்ள நிலையில் அது தொடர்பிலான விவாதம் நாளை நடைபெறவுள்ளது.

கடந்த வருடம் பெப்ரவரி 22ஆம் திகதி முதல் மார்ச் 24ஆம் திகதி வரை நடைபெற்ற 46 ஆவது கூட்டத் தொட ருக்கு இலங்கையின் மனித உரிமை நிலைமை தொடர்பில் (46/1)அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அதன்போது இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் தொடர்பில் 49ஆவது கூட்டத்தொடரில் எழுத்து மூல அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ள நிலையில் அதனை சமர்ப்பிப்பதற்கு நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ)

## 5ஆம் திகதி...

தலைமை யில் நேற்றுமுன்தினம் இரவு நடை பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது நாளாந்தம் அமுல்படுத்தப்படும் மின்விநியோக தடை தொடர்பில் அவ தானம் செலுத்தப்பட்டுள்ளது.

மின்னுற்பத்தி நிலையங்களுக்கு தேவையான எரிபொருளை பெற்றுக் கொள்ள மின்சாரத்துறை அமைச்சு பொருத்தமான திட்டங்களை துரிதமாக செயல்படுத்த வேண்டும்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத் தாபனம் அல்லது தனியார் தரப்பினரி மிருந்து மின்நிலையங்களுக்கு தேவை யான எரிபொருளை பெற்றுக்கொள் ளுமாறும் ஜனாதிபதி அமைச்சருக்கு கூறினார்.

இதற்கமைய எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் மின்விநியோகத்தை துண்டிக்கா மல் தடையில்லாமல் மின்விநியோ கத்தை முன்னெடுக்க தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் ஜனாதிபதி மின்சாரத்துறை அமைச் சருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

எரிபொருள் கொள்வனவிற்கு தேவையான டொலரை விநியோகிக்க உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட் டுள்ளன. ஆகவே எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு பின்னர் நாடுதழுவிய ரீதியில் மின்விநியோகத்தை துண்டிப்பது அவசி யமற்றது என நிதியமைச்சர் பஸில் ராஜ பக்ஷ அமைச்சரவையில் குறிப்பிட்டுள் ளார். (ஐ)

# வங்கக் கடலில் தாழமுக்கம்!

கிளிநொச்சி, மார்ச் 02

தற்போது வங்கக் கடலில் ஏற்பட் டுள்ள தாழமுக்கம் காரணமாக இன்று இரவிலிருந்து மழை பெய்வதற்கான சாத்தியம் காணப்படுவதாக கிளிநொச்சி அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாளை மறுதினம் கனமழை பெய் வதற்கான சாத்தியம் காணப்படுகின்றது என்றும், இக்காலப்பகுதிகளில் காற்று பலமாக வீசுவதுடன் இடி மின்னல் தாக்கமும் ஏற்படலாம் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடலும் கொந்தளிப்பாக கணப்படலாம் எனவும் எனவே மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு கிளிநொச்சி அனர்த்த முகாமைத்துவ பிரிவு கேட்டுள்ளது. (அ)

## இறுக்கமான...

3 தடுப்பூசிகள் போட்டுக் கொண்ட வர்கள் மாத்திரமே பாலாவியில் தீர்த்தம் எடுத்து வருவதற்கு அனுமதிக்கப்பட்ட னர்.

ராணுவம் ,பொலிஸ், சுகாதாரத் துறை யினர் இணைந்து இந்த பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

மன்னார் பிரதேச செயலாளரின் ஒழுங்கு படுத்துதலிலும் மன்னார் மாவட்ட செயலாளர், மன்னார் பிராந் திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் போன்றோரின் மேற்பார்வையில் வெளி நிர்வாக ஒழுங்குகள் நடை முறைப் படுத் தப்பட்டன.

பக்திபூர்வமாக பூஜைகள் நடைபெற் றதுடன் பக்தர்களும் மிக அமைதியாக தீர்த்தம் எடுத்து வந்து மூல லிங்கத்துக்கு அபிஷேகம் செய்து தங்களுடைய நேர்த் திக் கடன்கள் செலுத்தினர். (அ)

## சுகாதார...

கடந்த மாதம் 7ஆம் திகதி முதல், 9 நாட்களுக்கு தாதியர் உள்ளிட்ட 18 சுகாதார தொழில் சங்கங்கள் பணிப்புறக் கணிப்பு நடவடிக்கையை முன்னெ டுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கொரோனாவால்...

தகவல் திணைக்களம் நேற்று அறிவித் தது.

60 வயதுக்கு மேற்பட்ட 19 பேரும், 30 - 59 வயதுக்கு உட்பட்ட இருவரும் 11 ஆண்களும் 11 பெண்களுமே இவ் வாறு உயிரிழந்தனர் என்றும் தெரிவிக் கப்பட்டது.

இதன்படி, நாட்டில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 16ஆயிரத்து 244 பேராக உயர்ந்துள்ளது. (ஐ)

## போர்க் குற்ற...

படுத்தக்கூடாது என்பதில் இலங்கை உறுதியாக இருக்கிறது. பயங்கரவாத தடுப்புச் சட்டம், விசாரணைத் தடுப்பு மற்றும் விசாரணைக்கு உட்பட்ட நபர் களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் பாதுகாக்கவும் வேண்டும் என்பதில் இலங்கை உறுதியாக உள்ளது, கருத்துச் சுதந்திரம் போன்ற ஜனநாயக சுதந்தி ரங்களை கட்டுப்படுத்தக்கூடாது.

பயங்கரவாத தடைச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு 43 வருடங் களின் பின்னர், அதனைத் திருத்துவ தற்கான ஆரம்ப நடவடிக்கையாக முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இலங் கையின் அனுமதியின்றி 46/1 தீர்மா னத்தில் முன்வைக்கப்பட்ட சாட்சி யங்களை சேகரிக்கும் பொறிமுறை யானது நல்லிணக்க முயற்சிகளுக்கு தடைகளை ஏற்படுத்தவும், கடந்த கால காயங்களை மீண்டும் திறப்பதன் மூலம் வெறுப்பை வளர்க்கவும், சமூகத்தை துருவப்படுத்தவும் மட்டுமே முடிந்தது - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# சமையல் எரிவாயு வெடிப்பு; ஐ.நாவில் இன்று முறைப்பாடு!

கொழும்பு, மார்ச் 02



சமையல் எரிவாயு வெடிப்பால் பாதிக்கப்பட்ட மற்றும் காயமுற்றவர் களுக்கு நீதிகோரி, அகில இலங்கை பாவனையாளர் கூட்டமைப்பு இன்று கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்திற்கு மகஜர் ஒன்றை கையளிக்க ஏற்பாடு செய்துள்ளது.

கடந்த ஆறு மாதங்களுக்குள் சமையல் எரிவாயு அடுப்பு உப்பட உபகரணங்கள் வெடிப்பு சம்பவங்கள் 800வரை பதிவாகியுள்ளன.

இந்த சம்பவங்களில் 8 பேர் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என அந்தக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. வெடிப்பு சம்பவங்களினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கும் காயமுற்றோருக்கும் இழப்பீடு வழங்கும்படி அரசிடமும், எரிவாயு நிறுவன முகாமையாளர் களுக்கும் வேண்டுகோள் விடுத்தும் இதுவரை எந்தவித பதிலும் தெரிவிக் கப்படவில்லை.

இதனால் ஐக்கிய நாடுகள் சபையை நாடவுள்ளதாக கூட்டமைப்பின் செய லாளர் மிலிந்த பிரேமரத்ன தெரிவித் துள்ளார்.

# மனுஷ, ஹரின் நேற்று ஜெனிவாவுக்கு பயணம்

கொழும்பு, மார்ச் 02

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளு மன்ற உறுப்பினர்களான ஹரின் பெர் னாண்டோ மற்றும் மனுஷ நாணாயக் கார ஆகியோர் நேற்று அதிகாலை ஜெனீவா நகருக்கு பயணித்தனர்.

தற்போது சிறைத்தண்டனை அனுப வித்து வரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தொடர் பில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையில் விடயங்களை முன்வைப்பதற் காக இவர்கள் ஜெனிவாவுக்கு பயணித் துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன் தினம் ஆரம்பமாகிய ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையின் 49 ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளது. (அ)

# டீசல் ஏற்றிய 2 கப்பல்கள் இன்றும், நாளையும் வரும்

கொழும்பு, மார்ச் 02

டீசல் ஏற்றிய மேலும் 02 கப்பல்கள் இன்றும் நாளையும் நாட்டை வந்தடையவுள் ளன.

அவற்றில் ஒரு கப்பலில் 33,000 மெற்றிக் தொன் ஓட்டோ டீசலும் 7000 மெற்றிக் தொன் சுப்பர் டீசலும் உள்ளதாக எரிசக்தி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

மற்றைய கப்பலில் 28,000 மெற்றிக் தொன் டீசலும் விமானங்களுக்கு பயன்படுத்தப் படும் 9000 மெற்றிக் தொன் எரிபொருளும் உள்ளதாக அவர் கூறினார்.

இந்த இரு கப்பல்களுக்குமான கடன் கடிதத்தை பகிரங்கப்படுத்துவதற்கான நடவ டிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

நாட்டில் தற்போது போதுமான எரிபொருள் கையிருப்பில் உள்ளதாக எரிசக்தி அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

எரிபொருள் ஏற்றிய மேலும் 02 கப்பல்கள் எதிர்வரும் 06, 07 ஆம் திகதிகளில் நாட்டை வந்தடையவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# உக்ரைன் - ரஷ்ய போர் சூழலினால் உரத்தை விநியோகிப்பதில் சிக்கல்!

கொழும்பு, மார்ச் 02



சிறுபோகத்திற்கு இரசாயன உரத்தை விநியோகிப்பதில் சிக்கல் நிலை ஏற்படக்கூடும் என உர இறக்குமதியாளர் கள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தின் நிவாரண திட்டத்தின் கீழ் விநியோகிப்பதற்காக, 38 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் மியூரியேட் ஒவ் பொட்டாஸ் உரத்தை, இரண்டு அரச உர நிறுவனங்களின் ஊடாக இறக்குமதி செய்ய அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மியூரியேட் ஒவ் பொட்டாஸ் உரமானது, பெலாரஸில் இருந்தே அதி களவில் இறக்குமதி செய்யப்படுகிறது.

தற்போது உக்ரைன் போர் காரண மாக, உர இறக்குமதியிலும் பிரச்னை ஏற்பட்டுள்ளதாக உர இறக்குமதியாளர் கள் சங்கத்தின் பிரதிநிதி பசாட் வீரசேகர தெரிவித்தார்.

இந்த நிலையில், வேறு நாடுகளில் இருந்து உரத்தை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (அ)

## இன்று...

இதேபோன்று, மதியம் ஒரு மணி முதல் மாலை 6 மணி வரையும் பின்னர் இரவு 8.30 மணி முதல் 11 மணி வரையும் எவ், பி, கியூ, ஆர், எஸ் வலயங்களில் மின்வெட்டு நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# 2024 ஆம் ஆண்டின் பின்னரும் தொடரும் கோட்டாபய ஆட்சி

## பவித்ரா வன்னியாராச்சி கூறுகிறார்



கொழும்பு, மார்ச் 02

**சிவில் யுத்தத்தை வெற்றிக்கொண்டதை போன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொருளாதார யுத்தத்தையும் சிறந்த முறையில் வெற்றி கொள்வார் என போக்குவரத்து துறை அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.**

2024 ஆம் ஆண்டுக்கு பிறகும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவே ஆட்சியமைக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இரத்தினபுரியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- நல்லாட்சி அரசாங்கத்தினால் பலவீனமடைந்த பொருளாதாரத்தையே பொறுப்பேற்றோம். அரசியல் முரண்பாடுகளின் காரணமாக தேசிய பாதுகாப்பு திட்டமிட்ட வகையில் பலவீனப்படுத்தப்பட்டது. தேசிய பாதுகாப்பு பலவீனத்தை அடிப்படைவாதிகள் சாதகமாக பயன்படுத்திக்கொண்டார்கள்.

பாரிய எதிர்பார்ப்புக்கு மத்தியில் நாட்டு மக்கள் ஜனாதிபதி கோட்டாபய தலைமையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள்.

கோவிட்-19 பெருந்தொற்று பரவல் அரசாங்கத்தின் செயற்பாட்டிற்கு பாரிய தடையாக காணப்பட்டது. வைரஸ் தொற்றிலிருந்து நாட்டு மக்களை பாதுகாக்க அரசாங்கம் முன்னுரிமை வழங்கியது. கோவிட்-19 வைரஸ் தாக்கத்தின் பின்னரான காலப்பகுதியில் தேசிய பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

சிவில் யுத்தத்தை வெற்றிக்கொண்டதை போன்று ஜனாதிபதி பொருளாதார யுத்தத்தையும் வெற்றி கொள்வார். நடைமுறையில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளை முகாமைத்துவம் செய்ய அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கு பிறகும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவே ஆட்சியமைக்கும். நடைமுறையில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகள் அரசாங்கத்தின் இருப்புக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்பதை தெளிவாக குறிப்பிட்டுக்கொள்ள வேண்டும்.

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக பொதுபோக்குவரத்து சேவை பாதிக்கப்படும் என எதிர் தரப்பில் அரசியல் பிரசாரம் செய்துக்கொள்கிறார்கள்.

பொதுபோக்குவரத்து சேவைக்கான எரிபொருள் முழுமையாக விநியோகிக்கப்பட்டுள்ளது. எந் நிலையிலும் பொதுபோக்குவரத்து சேவைக்கு பாதிப்பு ஏற்படாது-என்றார். (அ)

# எக்ஸ்பிரஸ் பேர்ள் சேதத்துக்கு ஒரு பில்லியன் ரூபாய் இழப்பீடு

கொழும்பு, மார்ச் 02

தீ விபத்துக்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலினால் ஏற்பட்ட சேதத்துக்கு 4.75 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அல்லது கிட்டத்தட்ட 1 பில்லியன் ரூபா நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தினால் ஏற்பட்ட சுற்றாடல் பாதிப்பு உள்ளிட்ட ஏனைய பாதிப்புகளுக்காக காப்புறுதி நிறுவனம் ஒன்றின் ஊடாக 64 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் கோரப்பட்டுள்ளதாகவும், இதுவரை அடையாளம் காணப்பட்ட 23 தரப்பினருக்கு பெறப்பட்ட நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் கூறினார்.

நேரடியாக பாதிக்கப்பட்ட 15,032 மீனவர் குடும்பங்களுக்கு 78 கோடியே 50 இலட்சம் ரூபா நட்டஈடாக வழங்கப்பட உள்ளதாகவும். ஏற்கனவே 43 கோடி 3 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார். (அ)

# எல்லேவல நீர்வீழ்ச்சியில் மூழ்கி 2 மாணவர்கள் பலி!

கொழும்பு, மார்ச் 02

வெல்லவாய - எல்லேவல நீர்வீழ்ச்சியில் குளிப்பதற்குச் சென்று காணாமல் போயிருந்த இரு இளைஞர்கள் நேற்று பிற்பகல் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

எல்லேவல நீர்வீழ்ச்சியை பார்வையிட நேற்று 7 பேர் கொண்ட இளைஞர்கள் குழுவொன்று சென்றுள்ளது.

குறித்த இடத்தில் நீராடச் சென்றபோதே இந்த அசம்பாவித சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பல மணி நேரம் நீடித்த தேடுதல் நடவடிக்கைக்கு பின் நீரில் மூழ்கி உயிரிழந்த இரு இளைஞர்களின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டன.

உயிரிழந்தவர்கள் அக்கரைப்பற்று பிரதேசத்தை சேர்ந்த 21 வயது மற்றும் 22 வயதுடைய இளைஞர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களுள் 21 வயதுடைய இளைஞன் மொறட்டுவ பல்கலைக்கழக மாணவன் என்பதுடன் மற்றைய இளைஞன் இம்முறை க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றியிருந்தார் என தெரிவிக்கப்பட்டது. (அ)

# கொழும்பு கோட்டையில் திருடப்பட்ட ரஷ்ய சட்டத்தரணியின் மடிக்கணினி!

கொழும்பு, மார்ச் 02

இலங்கைக்கு சுற்றுலா வந்துள்ள ரஷ்யாவை சேர்ந்த பெண் சட்டத்தரணி ஒருவரின் மடிக்கணினி கோட்டை ரயில் நிலையத்தில் வைத்து கொள்ளையிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அந்த மடிக்கணனி கொழும்பு செட்டியார் தெருவில் உள்ள நகைக்கடையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் ரயில் நிலைய அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கோட்டை ரயில் நிலையத்தின் பொறுப்பதிகாரி பிரதீப் ஜயசூரிய உள்ளிட்ட குழுவினர் அதனை கைப்பற்றியுள்ளனர்.

ரஷ்யாவை சேர்ந்த இந்த சட்டத் தரணி கடந்த 27 ஆம் திகதி ராஜரட்டை ரஜின ரயிலில் ஏறுவதற்காக கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் காத்திருந்துள்ளார்.

அப்போது ஒருவர் தனது மடிக் கணினியை திருடிச் சென்றதாக, அவர் ரயில் நிலைய பொறுப்பதிகாரியிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து ரயில் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட அதிகாரி கள், ரஷ்ய சட்டத்தரணியின் செல்லிடப்பேசி செயலியை பயன்படுத்தி, அந்த தகவல் ஊடாக மடிக் கணினி கொழும்பு செட்டியார் தெருவில் உள்ள நகைக் கடை ஒன்றில் இருப்பதை கண்டுபிடித்துள்ளனர்.

மடிக்கணினியை திருடிய நபரை கண்டுபிடிக்க பொலிஸார் விசாரணை களை நடத்தி வருகின்றனர்.

மடிக்கணனியை தேடிக்கொடுத்த கோட்டை ரயில் நிலைய பொறுப்ப திகாரி உள்ளிட்ட அதிகாரிகளுக்கு ரஷ்ய சட்டத்தரணியான சேமியா மைசேக் நன்றி தெரிவித்து, ரயில் நிலையத்தின் முறைப்பாடு மற்றும் பரிந்துரை புத் தகத்தில் குறிப்பை எழுதியுள்ளார்.

# ஜேர்மன் கலாசார நிறுவன பணிப்பாளர் யாழ். மாநகர முதல்வருடன் சந்திப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 02

இலங்கைக்கான ஜேர்மனியின் கலாசார நிறுவன பணிப்பாளர் ஸ்டீபன் விங்லர் நேற்று யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணனைச் சந்தித்து கலந்துரையாடினார்.

நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் யாழ்.மாநகர சபையில் இடம்பெற்ற இந்த சந்திப்பில், யாழ்ப்பாணத்தில் ஜேர்மன் மொழியை பயிற்றுவிப்பது தொடர்பாகவும் ஜேர்மன் கலாசார நிகழ்வுகளை இங்கு உள்ளவர்களுடன் இணைந்து மேற்கொள்வது தொடர்பாகவும் ஒரு நட்பு ரீதியான சந்திப்பு இடம்பெற்றதாக யாழ்.மாநகர முதல்வர் ஊடகங்களுக்கு தெரிவித்தார். இந்த சந்திப்புக்கு பின்னர் இலங்கைக்கான ஜேர்மனியின் கலாசார நிறுவன பணிப்பாளருக்கு யாழ்.மாநகர முதல்வரால் நினைவுப்பரிசு வழங்கப்பட்டது. எதிர்வரும் காலத்தில் ஜேர்மன் மொழி,கலாசாரம் சார்ந்த நூல்களை யாழ்ப்பாணப் பொதுசன நூலகத் துக்கு வழங்குவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. (அ-03)







# பாகிஸ்தான் செல்கிறார் பிரதமர்

கொழும்பு, மார்ச் 02

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான தூதுக்குழுவினர் எதிர்வரும் ஏப்ரல் மாதம் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்ய உள்ளதாக தெரியவருகிறது.

இலங்கைக்கான புதிய பாகிஸ்தான் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள உமர் பாரூக் புர்கி கடந்த 22 ஆம் திகதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தபோது இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் கடந்த வருடம் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு ஒத்துழைப்புகளை முன்னெடுத்துச் செல்வதற்கான சில புரிந்துணர்வு உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்பட்டன. இலங்கைக்கான பாகிஸ்தானின் புதிய தூதுவர் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி என்பதுடன் அவர் பாகிஸ்தான இராணுவத்தில் மேஜர் ஜெனரல் தர பதவியை வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# உக்ரைன்-ரஷ்ய போரில் சிக்கி இந்திய மாணவர் உயிரிழப்பு!

கீவ், மார்ச் 02

உக்ரைன் - ரஷ்யா யுத்தத்தில் சிக்கி இந்திய மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சு இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

ரஷ்ய இராணுவம் கார்கீவ் நகரில் நடத்திய பயங்கரவாத தாக்குதலில் சிக்குண்டே குறித்த மாணவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கார்கிவ் நகரத்தில் உள்ள மருத்துவ கல்லூரி ஒன்றில் படித்து வந்த கர்நாடகா மாநிலத்தைச் சேர்ந்த நவீன் சேகரப்பா என்பவரே இவ்வாறு உயிரிழந்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.03.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றையராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர்
விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-கலகலப்பு-சகா,கீ
திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை
நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10
திரைப்படங்களின் தரவரிசை



**இரவு**
7.00 மணி : பாரதீ
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
09.30 மணி: பத்துக்கு 10
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகேகோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : ஞானவழி
(மறு ஒளிபரப்பு ஞாயிறு)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : மறைக்கல்வி
(மட்டக்களப்பு) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
06.00 மணி : இயேசுவின் போதனைகள்
07.30 மணி : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு